இனி இது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 29 செவ்வாய்க்கிழமை 14.08.2018 | கதிர் 282

'இனி இது இரகசியம் அல்ல' என்ற இந்தப் பகுதி சில இரகசியங்களைவெளிப்படுத்துவதற்கான ஒன்று தானே! அப்படி ஓர் இரகசியத்தைப் பகிர்வதற்கான வேளை இது என நினைக்கிறேன். எஸ்.வெங்கட்நாராயணன் என்ற செய்தியாளருக்கு சில... பக்கம் 08

# சபாநாயகரைப் புறந்தள்ளி சபையில் செயற்படுவோம்

## கூட்டு எதிரணி பகிரங்க எச்சரிக்கை



கொழும்பு, ஓகஸ்ட் 14

எதிரணியின் உரிமைகளைச் சபாநாயகர் புறக்கணிப்பாரானால், நாமும் நாடாளுமன்றில் சபாநாயகரைப் புறக்கணித்து செயற்படுவோம்.

இவ்வாறு பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். பக்கம் 14

## தமிழ் மீனவர்கள் வாடிக்கு நேற்று தீ வைப்பு!

முல்லைத்தீவு, ஓக.14

முல்லைத்தீவு நாயாறு பகுதியில் தமிழ் மீனவர்களது வாடிகளுக்கு இனம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நாயாறுப் பகுதியில் தனி ஒருவர் 40 படகுகள் வைத்து தொழில் செய்வதால் தமது தொழில் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் மத்திய மீன்பிடி அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்ஸாவிடம் சுட்டிக்காட்டிய பகுதியில் உள்ள தமிழர்களின் வாடிகளுக்கே தீ வைக்கப்பட்டுள்ளது.

இதனால் வாடியில் இருந்த மீனவர்களது பலலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங் பக்கம் 14

## யாழ். கரையோரங்களில் சட்டவிரோதக் கட்டடங்கள்

### அகற்ற நடவடிக்கை என்கிறார் யாழ். மேயர்



யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.மாநகர எல்லைக்குள் கடற்கரையோரங்களில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள் நிச்சயமாக அகற்றப்படும் என யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலகத்தில் பக்கம் 14

## வன்முறைகள் தலைதூக்க வடக்கு மக்கள் அனுமதியார்

### கூறுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஓக.14

வன்முறைகள் மீண்டும் தலைதூக்குவதற்கு வடபகுதி மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். பக்கம் 14

## கேப்பாபிலவை மீட்க இனிமேல் யாரையும் நம்பப்போவதில்லை

### அந்தப் பகுதி மக்கள் அறிவிப்பு




முல்லைத்தீவு, ஓக.14

தமது சொந்த நிலத்தினை மீட்பதற்கு இனிமேல் யாரையும் நம்பப்போவதில்லை என கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். பக்கம் 14

## அழிவை நோக்கி கூட்டு எதிரணி

### அமைச்சர் அகிலவிராஜ் கூறுகிறார்



கொழும்பு, ஓக.14

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வெற்றியை சரியான முறையில் பயன்படுத்தாததன் காரணமாக கூட்டு எதிரணி இன்று அழிவை நோக்கி பயணிக்கிறது என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய பக்கம் 14

## மஹிந்த தலைமையில் இன்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஓக.14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில், முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

மஹிந்தவின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்தகலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. பக்கம் 14

## செஞ்சோலை படுகொலையின் 12ஆவது நினைவேந்தல் இன்று


முல்லைத்தீவு, ஓக.14

முல்லைத்தீவு செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீதான இலங்கை அரச வான்படையின் குண்டுத் தாக்குதலில் 61 மாணவிகள் படுகொலை செய்யப்பட்டு 12 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன.

மாணவிகள் படுகொலையின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பக்கம் 14

## யாழ்.சிறை நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு விரைவில் வழக்கு

### யாழ். பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்




யாழ்ப்பாணம், ஓக.14

யாழ். சிறைச்சாலை வளாகத்தில் மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என பக்கம் 14

## நுண்கடன் பாதிப்பு குறித்து அரசுடன் விரைவில் பேச்சு

### மாவை எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.பிரதேச செயலக எல்லைக்குள் 32 நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் இருக்கும் நிலையில் மேற்படி நிதி நிறுவனங்களில் நுண்கடன் பெற்ற மக்கள் குறிப்பாக பெண்கள் பெரும் பாதிப்பில் உள்ளனர். இது தொடர்பாக அரசுடன் பேச்சு நடத்தப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போது நுண்கடன் திட்டங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் 14

## சர்வதேச இளையோர் தின தேசிய நிகழ்வு பிரதமர் தலைமையில்!



கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக இளம் சந்ததியினர் முன்வர வேண்டுமென பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச இளையோர் தினத்தை முன்னிட்டு, ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தேசிய வைபவம் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் சாகல ரத்னாயக்க, எதிர்கால உலகை வெற்றி கொள்ளக்கூடிய இளம் சமூகமொன்று உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார். இதற்காக இளம் சந்ததி பெற்றுக் கொள்ள வேண்டிய மிகப் பெரிய வல்லமை ஆக்கபூர்வ ஆற்றலாகுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் எரந்த வெலிஹங்கேயும் அங்கு உரையாற்றினார்.

## யாழ். குடாநாட்டு வாள்வெட்டுடன் தொடர்புடைய 29 பேர் கைதாகினர்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டுகள் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வடக்கில் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளை தடுப்பதற்கு, பொலிஸாரும், படையினரும், தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், கோப்பாய் போன்ற காவல்துறை பிரிவுகளில் குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களின் மறைவிடங்களில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே, 29 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து, ஏழு வாள்கள், எட்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் 53 காவல் நிலையங்கள் உள்ள போதிலும், நான்கு காவல்நிலையப் பகுதிகளில் மாத்திரம், இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

பொதுமக்களிடம் இருந்து கிடைத்த தகவல்களை அடுத்தே, வன்முறைக் குழுவினரின் மறைவிடங்களில் சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர்களான இளைஞர்களிடம் எந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலும் கிடையாது. சில போட்டியாளர்களை இலக்கு வைப்பதற்காக, சில பிரதேச அரசியல்வாதிகள், வணிகர்கள் இவர்களின் பின்னணியில் இருக்கிறார்கள்.

இத்தகைய குழுக்களின் செயற்பாடுகள் குறித்து 0766 093 030 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தகவல்களை அளிக்க முடியும்.

அவ்வாறு அளிக்கப்படும் தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும் என்றும், தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்

## சிறைக்கைதிகளுக்கான உடையில் ஞானசார தேரர்!



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆறு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சிறைக் கைதிகள் அணியும் ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஞானசார தேரர் தற்போது சிறிஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் 5 ஆவது இலக்க விடுதியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்கு ஒரு சிறை அதிகாரியும், இரண்டு சிறைக்காவலர்களும் ஆயுதங்களுடன் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஞானசார தேரருக்கு சிறைக் கைதிகள் அணியும் ஆடையை சிறைச்சாலை அதிகாரிகள் வழங்கியுள்ளனர்.

சிறைக்கைதிகள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் போது அணியும், காற்சட்டை மற்றும் மேலங்கியே ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் அனைவரும் சிறைச்சாலை உடைகளை அணிய வேண்டியது கட்டாயமாகும்.

## ஜே.வி.பியின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது!

**அஜித் பி.பெரேரா தெரிவிப்பு**

அரசு வீண்செலவுகளை செய்வதால் தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவிக்கும் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானதாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கூட்டரசாங்கத்தின் இரண்டு தலைவர்களும் செலவீனங்களைக் குறைத்தே நிர்வாகத்தை முன்னெடுக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் தலைவரை போன்றே நாட்டின் நிர்வாகத்தை மேற்கொள்கின்றார்.

குறிப்பாக ஜனாதிபதி வெளிநாட்டு உத்தியோகபூர்வ அரச பிரயாணங்களின் போது பிரத்தியேகமான விமானங்களில் பயணிப்பதில்லை. பொதுமக்கள் பயன்படுத்தும் விமானங்களில் மக்களோடு மக்களாகப் பயணிக்கின்றார்.

இவ்வாறு கடந்த மூன்று வருட காலமாக அரசு எவ்விதமான விளம்பரங்களும் இன்றி மக்களுக்கு பெரும் அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதை மக்கள் விடுதலை முன்னணியினர் கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## குருநாகல் குடிதண்ணீர் விநியோகத் திட்டம்

**அமைச்சர் ரவூப் ஹக்கீமால் திறப்பு**

நல்லாட்சி அரசு பதவியேற்று எதிர்வரும் 17ஆம் திகதியுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இதனை முன்னிட்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்படவுள்ளன.

குருநாகல் பிரதேசத்தில் ஆயிரத்து 550 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

## சபாநாயகரின் முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாட முடியாது!

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பாக சபாநாயகர் எடுத்துள்ள முடிவுக்கு எதிராக எவரும், நீதிமன்றத்தை நாட முடியாது என்று நாடாளுமன்ற அவை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டு எதிரணி கோரி வந்த நிலையில், இரா. சம்பந்தனிடம் உள்ள அந்தப் பதவியை மாற்றும் அதிகாரம் தனக்கு இல்லை என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், முன்னர் அனுர பண்டாரநாயக்க சபாநாயகராக இருந்த



லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

போது, நாடாளுமன்றத்தில் எடுக்கப்படும் முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தில் சவால் விடுக்க முடியாது என்று தீர்ப்பளித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பாக சபாநாயகர் சரியான தீர்ப்பையே அளித்துள்ளார். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் சர்வதேச விவசாய ஆய்வு மாநாடு!

சர்வதேச விவசாய ஆய்வு மாநாடு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று ஆரம்பமானது.

இந்த மாகாநாடு இன்றும் இடம் பெறவுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகள் 200 பேர் இதில் கலந்து கொள்கின்றனர். விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் இந்த மாநாடு ஆரம்பமானது.

இதன் தொனிப்பொருள் புதிய உற்பத்தியை விவசாயத் துறையின் மூலம் மேற்கொண்டு விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக்குவது என்பதாகும். விவசாயத் துறையுடன் சம்பந்தப்பட்ட 107 ஆய்வு அறிக்கைகளும் இதில் வெளியிடப்படவுள்ளன.

# இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்க சிறப்பு போர் படைகள் நான்கு வாரப் பயிற்சி!

கொழும்பு, ஓக.14

இலங்கை கடற்படையின் சிறப்பு படையணிகளுக்கு அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர் படை அதிகாரிகள் அளித்து வந்த பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன.

கூட்டு ஒருங்கிணைந்த பரிவர்த்தனை பயிற்சித் திட்டத்தின் கீழ், Flash Style 2018/01 பெயரில், திருகோணமலையில் இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர் படைகள் பயிற்சி அளித்து வந்தன.





4 ஆவது அதிவேக தாக்குதல் படகு அணியைச் சேர்ந்த 26 கடற்படையினர் மற்றும் சிறப்பு படகு படையணியைச் சேர்ந்த 36 கடற்படையினருமாக, மொத்தம் 62 இலங்கை கடற்படையினருக்கு நான்கு வாரங்கள் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

ஜூலை 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சிகளின் நிறைவு நிகழ்வு கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றது.

அமெரிக்கா – இலங்கை இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள பயிற்சி மற்றும் ஆதரவு தேவைகள் தொடர்பாக பரஸ்பர புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமைய இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர் படைகளைச் சேர்ந்த பயிற்சி அதிகாரிகளும், இலங்கை கடற்படை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

# இரண்டாம் மொழிக் கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்



இரண்டாம் மொழி கற்கையைப் பூர்த்திசெய்த 60 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் வட மாகாண நிலையத்தில் இரண்டாம் மொழிக் கற்கையை பூர்த்தி செய்த 60 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

30 பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பிரதேச, மாவட்டச் செயலகங்களைச் சேர்ந்த 30 உத்தியோகத்தர்களுக்கும் என 60 தொடர்ச்சியாக பன்னிரண்டுநாள்கள் இக்கற்கை நெறியை பயின்றுள்ளனர். தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியினையும் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ்மொழியினையும் பயின்றுள்ளனர்.

இரண்டாம்மொழியில் தொடர்பாடலை மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்ட பாடநெறிக்கு அமைவாக தொடர்ச்சியாக பன்னிரண்டு நாள்கள் இரண்டாம் மொழிக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக இக் கற்கை நெறி கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தில் இடம்பெறும் என்றும் அரச உத்தியோகத்தர்கள் தங்களது திணைக்களங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், மாவட்ட சமூர்த்தி உதவிப் பணிப்பாளர் ஆரணி, தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கடலோரப் பாதுகாப்புக்கு அமெரிக்கா நிதி உதவி



இந்து சமுத்திரத்தில் சீனா தனது மூலோபாய முக்கியத்துவத்தை அதிகரித்து வரும் நிலையில் கடலோரப்பாதுகாப்புநடவடிக்கைகளைப்பலப்படுத்துவதற்காக அமெரிக்கா இலங்கைக்கு 3 லட்சத்து 90 ஆயிரம் டொலர்களை வழங்கவுள்ளது.

வெளிநாட்டு இராணுவ நிதியுதவியின் கீழ் இந்தத் தொகையை காங்கிரஸ் அனுமதித்தால் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வழங்கும் என கொழும்பிற்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எங்களுடைய இந்த பங்களிப்பை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் ஆராயவுள்ளோம் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான – வெளிப்படையான – விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கமைப்பை உறுதிசெய்வதற்காக தென்னாசியா மற்றும் தென்கிழக்காசியா ஆகிய நாடுகளிற்கு வழங்கவுள்ள 3 ஆயிரம் கோடி டொலர் நிதியுதவியின் ஒரு பகுதியாகவே இலங்கைக்கு அமெரிக்கா இந்த நிதியை வழங்குகின்றது.

சீனா தனது புதியபட்டுப்பாதை திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கையில் துறைமுகங்களிலும் ஏனைய உட்கட்டமைப்புத் திட்டங்களிலும் முதலீடுகளை அதிகரிக்கும் நிலையிலேயே அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் சீனாவிடமிருந்து 100 கோடி அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுள்ளதாக இலங்கையின் மத்திய வங்கி அறிவித்திருந்தது.

இலங்கையின் கடன்தொகை அதிகரித்து வருகின்ற போதிலும் தொடர்ந்தும் கடன்களை வழங்கத் தயார் என சீனா தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை இலங்கை சீனாவிற்குக் குத்தகைக்கு வழங்கியிருந்தது. குறிப்பிட்ட துறைமுகத்திற்காக பெற்ற கடனைத் திருப்பி செலுத்த முடியாத நிலையிலேயே இலங்கை இந்த நிலைக்குத் தள்ளப்பட்டது.

உலகின் மிகவும் மும்முரமான கிழக்கு மேற்கு கடற்பாதையில் அம்பாந்தோட்டை துறைமுகம் அமைந்துள்ளது. மேலும் இந்தியாவின் ஆதிக்கத்தின் கீழ் நீண்டகாலமாக அமைந்துள்ள பகுதியில் சீனா காலூன்றுவதற்கான வாய்ப்பையும் இது வழங்கியுள்ளது.

# வடமாகாண சபையின் அமைச்சர்கள் உடன் இராஜினாமா செய்யவேண்டும்

## ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

வடமாகாணசபையின் அமைச்சரவை தொடர்பில் தோன்றியுள்ள நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கு வடமாகாண சபையின் அமைச்சர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும் என வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீதிமன்றம் டெனீஸ்வரன் தொடர்பாக விடுத்த உத்தரவைத் தொடர்ந்து அமைச்சரவையின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற தீர்ப்பை தொடர்ந்து வடமாகாண சபை அமைச்சர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது, இதன் காரணமாக மாகாணசபை முடிவுகளை எடுக்க முடியாதநிலைக்கும் சட்டங்களை நிறைவேற்றமுடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய அமைச்சர்கள் பதவி விலகி புதிய அமைச்சர்கள் பதவியேற்பதற்கு வழிவிடுவதே இந்த நெருக்கடிக்கான சிறந்த தீர்வாக அமைய முடியும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் கீழ் முதலமைச்சரிற்கே அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளது. ஆளுநர் என்ற அடிப்படையில் எனக்கு அமைச்சர்களை நியமிக்கவோ நீக்கவோ அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்துள்ள ரெஜினோல்ட்குரே, இதன் காரணமாக முதலமைச்சர் இந்த விவகாரத்திற்கு உடனடியாகத் தீர்வைக் காணவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நடவடிக்கை எடுக்காவிடின் வேலைநிறுத்தம் தொடரும்



கொழும்பு, ஓக.14

அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிடின், அடுத்த தேர்தல் வரை, வேலைநிறுத்தங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இம்ரான் மகரூப் எம்.பியின் நிதியொதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள கிண்ணியா – ஜாயா வித்தியாலயத்தின் சுற்றுமதிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய எம்.பி, தாம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் போது, இந்நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படுமென வாக்குறுதியளித்ததாகக் குறிப்பிட்டதுடன், தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம் என்பதற்கான சான்றே, தற்போது நடைபெற்றுவரும் வேலைநிறுத்தங்கள் பறைசாற்றுகின்றன என்றார்.

நான்கு மணிக்கு முடிவெடுத்து, ஐந்து மணிக்கு வேலைநிறுத்தம் செய்யும் அளவுக்கு நாட்டில் அதியுச்ச ஜனநாயகம் காணப்படுவதாகவும் கடந்த ஆட்சியைப் போன்று, வேலைநிறுத்தம் செய்யும் தொழில்சங்கத் தலைவர்களது வீடுகளுக்கு, வெள்ளை வான் வராது என்றும்,

அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வெவ்வேறு தொழிற்சங்கங்கள் மூலம் வேலைநிறுத்தப் போராட்டங்களை நிகழ்த்தி, மக்களின் அன்றாட நடவடிக்கைகளைக் குழப்புவதன் மூலம், மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை உண்டாக்கவும் அரச அலுவலகங்களை முடக்கி, பொருளாதாரத்தை ஸ்தம்பிக்கச் செய்யவும், மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையில் இவை முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் இதன்போது குற்றஞ் சாட்டினார்.

மேலும், நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய அதியுச்ச ஜனநாயகத்தை, தொழிற்சங்கங்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத் துஷ்பிரயோகம் செய்கின்றன என்றும் இவ்வாறான செயற்பாடுகள், இனிவரும் காலங்களில் இந்த அரசாங்கத்தையும் மெல்ல மெல்ல சர்வதிகாரப் போக்குக்குச் செல்ல வழிவகுக்கும் என்றும் இம்ரான் மகரூப் எம்.பி எச்சரித்தார்.

# மலசலகூடத்திலிருந்து சடலம் மீட்பு




மாத்தறை, ஊறுபொக்க பிரதேசத்தில் மலசலகூடத்திலிருந்து சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஊறுபொக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊறுபொக்க, தம்பால யடிகல பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில் உள்ள பாழடைந்த மலசலகூடம் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய அமால் சிந்திக்க என்ற நபர் காணாமல்போயுள்ளார் எனஅவரது சகோதரரினால் ஊறுபொக்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த காணாமல் போனவரின் வீட்டிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள தேயிலைத்தோட்டம் ஒன்றில் உள்ள பாழடைந்த மலசலகூடம் ஒன்றில் இருந்து துர்நாற்றம் வீசியதால், பிரதேச வாசிகள் ஊறுபொக்க பொலிஸ் நிலையத்திற்கு இது தொடர்பாக அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த சடலம் காணாமல் போனவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிப்பதுடன், சடலத்தை மீட்கும் பணியை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# உணர்வுமிக்க சுதேசிகள் தமிழரே!

தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் ஆட்சிப் போக்கினால் இந்த இலங்கைத் தீவு எதிர்கொள்ளப் போகும் ஒரு மோசமான – ஆபத்தான – எதிர்காலம் குறித்து சரியான சமயத்தில் முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன்.

“இன்று வட பகுதியில் மட்டுமன்றி இலங்கையின் முழுப் பகுதிகளிலும் வெளிநாட்டு உள் நுழைவுகளும் அவற்றின் மேலாதிக்கங்களும் உணரப்பட்டு வருகின்றன. எமது பகுதிகளில் காணப்படுகின்ற – கூடிய வருமானங்களை ஈட்டக் கூடிய – இலங்கை வளம் மிக்க பகுதிகள், சுற்றுலாத் தளங்கள், இயற்கைத் துறைமுகங்கள், கடல் வளம், நீர்வளம், நிலவளம் என அனைத்தையும் தமதாக்கிக் கொள்ள கழுகுகள் போன்று பல சக்திகள் உள் நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் எம்மைச் சுற்றிப் பறந்த வண்ணம் உள்ளன.

“எம்மை அடக்கி ஆழ வேண்டும் என்று இன்று எண்ணுகின்ற பெரும்பான்மைச் சமூகத்தினர் மிக விரைவில் எம்மையும் தமது சகோதரர்களாக அணைத்துக் கொண்டு வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து இலங்கையையும் அதன் உள்ளக வளங்களையும் பாதுகாப்பதற்குச் சேர்ந்து போராட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படப் போகின்றது என்பதை உணர்கிறேன்”

–இவ்வாறு முன்னெச்சரிக்கை அறிவிப்பு விடுத்திருக்கிறார் முதல்வர்.

விதேசிகளிடம் விலை போகாத தேசிய உணர்வுமிக்க சுதேசிகள் தமிழர்கள் என உணர்ந்து, சிங்கள, தமிழ்த் தேசியங்களை உள்ளடக்கிய இந்த நாட்டின் ஒட்டுமொத்த தேசியங்களை – தேசங்களை – பாதுகாப்பதற்காகத் தமிழர்களுடன் சிங்களவர்கள் தாமாக நாடி வந்து கைகோக்கும் சூழல் விரைவில் வரப் போகின்றது என்பதையே முதல்வர் முற்கூட்டியே உணர்ந்து இவ்வாறு உரைத் திருக்கின்றார்.

இத்தகைய சூழல் இனி தான் வரப் போகின்றது என்பது அல்ல. எமது வாழ்க்கைக் காலத்தில் நாம் முன்னர் நடந்த அனுபவம் தான் இது. நீண்ட காலத்திற்கு முன்னர் நடந்த விடயம் அல்ல. கடந்த முப்பது, முப்பத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாம் பெற்ற பட்டறிவில் இந்த போக்குக்கு நல்ல உதாரணம் உண்டு.

முதல்வர் விக்னேஸ்வரன் தமது உரையில் பூர்வீகக் குடிகள் எனத் தமிழர்களைக் குறிப்பிட்டு, தமது வரிகளுக்கு இடையில் சுட்டிக்காட்டும் தமிழர் தேசம், இந்த இலங்கைத் தீவில் அந்நியப்படுத்தப்பட முடியாத ஓர் அங்கம். அந்தத் தேசத்தின் உரிமைப் போராட்டத்தை அடக்கி அழித்தொழிப்பதற்காக இந்திய அமைதிப் படை என்ற பெயரில் அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புக்குத் தானே வெற்றிலை வைத்தது தென்னிலங்கை.

அப்போது தான் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தம் உயிரையும் தியாகம் செய்து இந்த நாட்டின் தேசியங்களை நிலை நிறுத்துவதற்காகப் போராடும் உண்மையான சுதேசிகள் யார், அந்நிய ஆக்கிரமிப்புக்கு வழிகோலும் விதேசிகள் யார் என்பதைத்தென்னிலங்கையும் பட்டறிவாக உணரும் சூழல் ஏற்படும்.

அச்சமயம், அந்நிய ஆக்கிரமிப்பை வன்முறை நடவடிக்கைகள் மூலம் எதிர்க்க வேண்டும் என்ற கருத்துடன் தென்னிலங்கையில் சீறி எழும்பிய ஜே.வி.பி. போன்ற சக்திகளால் கூட, தென்னிலங்கை ஆட்சிப் பீடத்துக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்த முடிந்ததே தவிர, அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை.

ஆனால், உலகின் நான்காவது மிகப் பெரிய இராணுவத்தை, சிறிய கரந்தடிப் படையுடன், வெளி உதவி ஏதுமின்றி, சுமார் மூன்று ஆண்டுகள் சளைக்காமல் எதிர் கொண்டு வீர, தீரத்துடன் போராடியது தன்மான உணர்வுமிக்க தமிழர் படை.

தமிழர் படையை – தமிழீழ விடுதலைப் புலிகளை– இன்று ‘பயங்கரவாதிகள்’ என்று வையும் ஜே.வி.பி. உட்பட்ட தென்னிலங்கைச் சக்திகள், அன்று *‘இலங்கைத் தீவின் உண்மையான சுதேசிய உணர்வுமிக்க வீரன், அந்நிய ஆக்கிரமிப்பைத் தனித்து எதிர்கொண்டு போராடும் விடுதலைப் புலிகளின் தலைவன் பிரபாகரன் தான்’* என்று போற்றிப் பாராட்டும் நிலைமை இருந்ததை நினைவூட்ட விரும்புகிறோம்.

அந்த மெச்சுதலின் உச்சக் கட்டமாக நிகழ்ந்த மற்றொரு விடயத்தையும் இங்கு, இப்போது சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும்.

தான் வெற்றிலை வைத்து, ஆவணங்களில் ஒப்பமிட்டு, வரவழைத்த ஆக்கிமிப்புப் படைகளை, இந்தத் தீவிலிருந்து வெளியேற்றவே முடியாது திணறிய தென்னிலங்கை, அந்த இராணுவத்துக்கு எதிராகப் போராடிய சுதேசிய சக்திகளான விடுதலைப் புலிகளுக்கு, அந்தப் போராட்டத்துக்காக லொறிகளில் ஆயுதங்களையும் பெருமளவு வெடி பொருள்களையும் வாரி வழங்கி விநியோகித்து அதன் மூலம் அந்த ஆக்கிரமிப்புப் படைகளை துரத்தியடிக்கும் முயற்சிக்குத் துணை போகும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது.

இந்தியாவிடம் ஆயுதப் பயிற்சியையும் ஆயுதங்களையும் பெற்று தென்னிலங்கைப் படைகளுடன் போரிட்ட விடுதலைப் புலிகள், பிற்காலத்தில் தென்னிலங்கையிடம் ஆயுதங்களைப் பெற்று இந்தியாவுக்கு எதிராகவும் போராடினார்கள். எதற்காக?

இந்த இலங்கைத் தீவின் சுதேசிகளின் தேசியத்தை ஆக்கிரமிப்பிலிருந்து காப்பதற்காக.

முதலாவது போர் – இலங்கைப் படைகளுடன் – தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க – அடுத்த போர் – இந்தியப் படைகளுடன் – இலங்கைத் தீவின் தமிழர் தேசியம், சிங்களத் தேசியம் ஆகிய இரண்டையும் பாதுகாப்பதற்காக.

ஆக, இந்த இலங்கைத் தீவில் உண்மையான சுதேசிய எண்ணத்துடன் – உணர்வுடன் – வாழும் தமிழர்களே இந்தத் தீவின் ஒட்டு மொத்தத் தேசியங்களையும் பாதுகாப்பதற்கு கிளர்தெழுவார்கள் என்ற உள்ளாந்தத்தைத் தென்னிலங்கை மீண்டும் ஒரு தடவை புரிந்து கொண்டு எம்மைத் திரும்பவும் நாடி வரும். அதற்கான சூழல் நீண்ட தூரத்தில் இல்லை. அதனைத் தான் முதல்வர் விக்னேஸ்வரனின் இந்தக் கருத்து கோடிட்டுக் காட்டுகின்றது.

# தமிழினத்தின் இலட்சியப் பயணத்தை சிதைக்கும் முயற்சியில் பேரினவாதிகள்

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஓக 14

தமிழ்த் தேசிய இனத்தின் இலட்சியப் பயணத்தை சிதைக்க சிங்களப் பேரினவாதிகள் கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்

பூநகரி முக்கொம்பன் சின்னப்பல்லவராயன்கட்டு மக்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

தமிழர் நீண்டகாலமாக ஓர் இலட்சியத்திற்காகவே போராடி வருகின்றோம். அகிம்சை ரீதியாகவும் ஆயுதரீதியாகவும் நாம் எமது உரிமைக்காகவே போராடி வந்துள்ளோம். போராடியும் வருகின்றோம். நாம் ஒரு தேசிய இனம் எமக்கு என்று தனித்துவமான மரபுகள் கலைகள் பண்பாடுகள் உண்டு. அவற்றை நாம் எவரிடமும் தாரை வார்த்து கொடுக்க முடியாது. அண்மைக் காலமாக சிங்கள அதிகார வர்க்கத்தில் உள்ள தலைமைகள் பலரும் அதிகாரத்தை கைப்பற்ற நினைப்பவர்களும் இவ்வாறான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது.

அண்மையில் வடக்கு மாகாண ஆளுநர் அபிவிருத்திக்காக தமிழ் மக்கள் போராட்டம் நடத்த வேண்டும் என்று கருத்தினை வெளியிட்டிருந்தார். அவரின் கருத்திற்கு பின்னால் நாம் எமது உரிமைகள் பற்றி சிந்திக்காது நாம் இந்த மண்ணிலேயே அடிமைகளாகவும் தாங்கள் தருகின்ற எலும்புத்துண்டுகளைக் கௌவிக்கொண்டு திரிய வேண்டும் என ஆசைப்படுகிறார்கள். அதற்காக கடந்தகால ஆட்சியில் எலும்புத் துண்டுகளை கௌவ்விக் கொண்டு திரிந்தவர்களை துணைக்கு அழைத்துக்கொண்டுசெல்கிறார். ஆனால் எமது மக்கள் விழிப்பாகவும் இலட்சி யப்பயணத் தடத்தை தவறிடாமல் பயணித்துக் கொண்டே இருக்கி றார்கள் – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மா காண உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மைத்திரிக்கும் ரணிலுக்கும் விரிசலை ஏற்படுத்துமா அமைச்சரவைக் கூட்டம்?

கொழும்பு, ஓக 14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும்பிரதமர்ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடைபெறவுள்ள வாராந்த அமைச்சரவை கூட்டம் முக்கியமான கூட்டமாக அமையப்பெறவுள்ளது.

கடந்த அமைச்சரவை கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அபிவிருத்தி உபாய மார்க்கங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் சமர்ப்பித்திருந்த பிரேரணைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் மீண்டும் இன்றுநடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த இரு பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதன்போது ஜனாதிபதி இந்தப் பிரேரணைகளை நிராகரிப்பாராயின், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டு நல்லாட்சி அரசிலும் தாக்கத்தை ஏற்படுத்துமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கம்பெரலிய கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாய் விசேட கொடுப்பனவை சிபாரிசு செய்திருந்தார். இதே போன்று அமைச்சர் மலிக் சமரவிக்ரம, அமைச்சுகள் தனியார் சட்ட ஆலோசனைகளை பெறுவதற்கான ஆலோசனைகளை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சபாநாயகரின் தீர்ப்பில் தவறு எதுவுமேயில்லை

## கூறுகிறார் டிலான்

கொழும்பு, ஓக 14

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய அளித்த தீர்ப்பில் தவறேதும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனிடமிருப்பதே பொருத்தமானது. ஆனால் 70 பேர் உள்ள கூட்டு எதிரணிக்குச் சபையில் அதிக நேரத்தை ஒதுக்கிக்கொடுக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சி மாற்று அணியின் முக்கியஸ்தர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் சூழலில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதே பொருத்தமான நிலையாகும். அதே போன்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் தான் முழுநாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்பதை மனதில் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வெடுக்குநாறிமலை செல்ல நிபந்தனைகளுடன் அனுமதி

கொழும்பு, ஓக 14

நெடுங்கேணி ஒலுமடு வெடுக்குநாறி மலைக்கும் அங்குள்ள ஆதி ஐயனார் ஆலயத்திற்கும் செல்லக்கூடாதென தொல்லியல் திணைக்களம் வழங்கியிருந்த உத்தரவை அந்தத் திணைக்களம் நிபந்தனைகளுடன் தளர்த்தியுள்ளது. இந்த அனுமதி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், வெடுக்குநாறி மலைக்கும் ஆலயத்திற்கும் செல்வதற்கும் தாம் அனுமதிப்பதாகவும், ஆனால் ஆலய புனரமைப்பு நடவடிக்கைகள் செய்வதாயின் தமது அனுமதியைப் பெறவேண்டும் என அந்தத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிகுந்த போராட்டத்தின் பின்னர் கடந்த சனிக்கிழமை ஆடி அமாவாசை விரதத்திற்கு மட்டும் வெடுக்குநாறி மலைக்கும் ஆலயத்திற்கும் மக்கள் செல்வதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில் வெடுக்குநாறி மலைக்கும் ஆலயத்திற்கும் செல்வதற்கு சில நிபந்தனைகளுடன் தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது

ஒலுமடு கிராமத்தில் உள்ள வெடுக்குநாறி மலை மற்றும் அங்குள்ள ஆதி ஐயனார் ஆலயம் ஆகியன தமது கட்டுப்பாட்டுக்குள் வருவதாக கடந்த 10 ஆம் திகதி அறிவித்த தொல்லியல் திணைக்களம் அங்கு செல்ல கூடாதெனவும் மீறிச் சென்றால் தண்டிக்கப்படுவீர்கள் எனவும் மக்களுக்கு கூறியிருந்தது.

# வெலிக்கடையில் பெண் கைதிகள் கூரையின் மேல் ஏறிப்போராட்டம்

கொழும்பு, ஓக 14

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் 10 பெண் கைதிகள் தமக்கான வழக்கு விசாரணையானது இழுத்தடிக்கப்பட்டுதாமதமடைந்து வருவதன் காரணமாக தாங்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளோம் என்றும் ஆகையினால் தமக்கான வழக்கைத் துரிதமாக விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரியே போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## நாளை

15.08.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: அத்தம் மு.இ. 9.55 வரை
திதி: சதுர்த்தி மு.ப. 8.29வரை
சுபநேரம்: 4.35 – 6.05 வரை
இராகுகாலம்: 12.05 – 1.35 வரை

# இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 10 நாடுகளுக்கு தூதுவர்கள் நியமனம்



இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் இலங்கை அரசின் கொள்கைகள் மற்றும் தொலைநோக்கு தொடர்பில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை அனைத்து நாடுகளுடனும் நட்புறவான கொள்கையை பேணுவதாகும். ஏதேனும் காரணத்தினால் அந்த இருதரப்பு நட்புறவுக்கு பாதிப்புஏற்பட்டிருக்குமானால் அதனை உடனடியாக சரி செய்வது இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்களின் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 10 நாடுகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்த போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நோர்வேநாட்டுக்கான இலங்கையின் புதிய தூதுவராக பேராசிரியர் அருஷா குரே.

ரஷ்யாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக கலாநிதி தயான் ஜயதிலக.

பிரேஸிலுக்கான இலங்கையின் புதிய தூதுவராக எம்.என். ஜபீர்.

கனடாவுக்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகராக எம்.ஏ.கே.கிரிஹாகம.

போலாந்துக்கான இலங்கையின் புதிய தூதுவராக சீ.ஏ.எச்.எம்.விஜயரத்ன.

சுவீடனுக்கான இலங்கையின் புதிய தூதுவராக எஸ்.எஸ். கனேகம் ஆராச்சி

வியட்நாமுக்கான இலங்கையின் புதிய தூதுவராக எஸ்.எஸ்.பிரேமவர்தன

தென் ஆபிரிக்காவுக்கான புதிய உயர்ஸ்தானிகராக அனுருத்தகுமார மல்லிமாரச்சி

இந்தியாவுக்கான புதிய உயர்ஸ்தானிகராக ஒஸ்ரின் பெர்னாண்டோ

பாகிஸ்தானுக்கான புதிய உயர்ஸ்தானிகராக நூர்டீன் முஹம்மட் சகீட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தூதுவர்களின் முக்கியமானதும் முதலாவதுமான பொறுப்பு இலங்கையின் நற்பெயரை சர்வதேச மட்டத்தில் மேம்படுத்துவதும் தாம் இருக்கின்ற நாடுகளின் அதிக பட்ச ஒத்துழைப்பை நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதும் ஆகும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சமூக ஊடகங்களின் ஊடாக சிலர் போலியான தகவல்களை பரப்புவதற்கு முயற்சித்து வருகின்ற நிலையில், இலங்கை பற்றிய சரியான நேர்மறையான பிரதிமையை காட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய தன் தேவையையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் செயலாளர் உதயஆர்.செனவிரத்ன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

# தோட்டத்தில் அல்ல இனி கிராமத்தில் வாழ்பவர்கள் எங்கள் மலையக மக்கள்!

## அமைச்சர் பழனி திகாம்பரம் பெருமிதம்



தோட்டத்தில் அல்ல இனி கிராமத்தில் வாழ்பவர்கள்எங்கள் மலையக மக்கள் என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் நிதியுதவியின் பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்திபுரம் கிராமத்தை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்உரையாற்றிய மலையக புதிய கிராமம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம்–

இத்தனை காலமும் மலையக மக்கள் தோட்டத்தில் வாழ்ந்தவர்கள் என அனைவரும் கூறினார்கள். இனியும் அவ்வாறு கூறுவதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

லயன்களில்வாழ்ந்தமலையக மக்களுக்கென தனி கிராமம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்னால் மலையக மக்கள் லயங்களில் வாழ்பவர்கள் அல்லர். கிராமங்களில் வாழ்பவர்கள். மலையக மக்களுக்கு 160 000 வீடுகள் தேவை. அவற்றை அமைத்து கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். 2012 ஆம் ஆண்டே இந்த திட்டம் அமுலுக்கு வந்து விட்டது. இருப்பினும் 2015ஆம் ஆண்டு இந்த அரசின்உதவியுடன் இந்தத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப் படுத்தியுள்ளோம்.

இந்திய அரசுக்கு எங்கள் மீது நம்பிக்கை வந்துள்ளது. மேலும் உதவிகள் இந்திய அரசாங்கம் எமக்கு வழங்கத் தயாராக இருக்கிறது என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

# இராணுவ வீரர்கள் இருவருக்கு ஏற்பட்ட போத்தல் தாக்குதலில் மூவர் வைத்தியசாலையில்!

இராணுவ வீரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட போத்தல் தாக்குதலில் மூன்று இராணுவ வீரர்கள் காயங்களுக்குள்ளாகி, தியத்தலாவை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தியத்தலாவை இராணுவ முகாமிலேயே மேற்படி சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இரவு நித்திரை வேளையில், இராணுவ சிப்பாயொருவர் வீணை வாசித்துக்கொண்டிருந்த போது, அதனை நிறுத்தும்படி பிறிதொரு இராணுவ சிப்பாய் கூறவே, அது தொடர்பாக ஏற்பட்டவாய்த்தர்க்கம்மோதலாகி, போத்தல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பிறிதொரு இராணுவ சிப்பாய் இம் மோதலை தடுக்க முற்பட்ட போது மூவரும் காயங்களுக்குள்ளாகினரென்று ஆரம்ப விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

போத்தல் தாக்குதல்களினால் ஏற்பட்ட வெட்டுக்காயங்களுடன் மூன்று இராணுவசிப்பாய்களும்சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து தியத்தலாவை பொலிஸார் இராணுவ பொலிஸாருடன் இணைந்து புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கொழும்பில் கணினியை தொலைத்து விட்டு வீதியில் பதாகையுடன் நின்ற சீனப் பிரஜை!





கொழும்பு, ஓக.14

கொழும்பில் வைத்து, சீனப் பிரஜை ஒருவரினால் தவறவிடப்பட்ட மடிக்கணினி, இலங்கையிலுள்ள பேஸ்புக்நண்பர்களின்உதவியுடன் அவரிடம் மீளவும் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

இந்த சீனப்பிரஜை அண்மையில் கொழும்பில் ஓட்டோ ஒன்றில் பயணித்த போது, அதில் தனது மடிக் கணினியைத் தவறவிட்டுள்ளார்.

தனது தொழிலுடன் தொடர்புடைய முக்கியமான ஆவணங்கள் அடங்கிய மடிக்கணினி தவறவிடப்பட்டமையினால் மிகவும் அசௌகரியத்துக்குள்ளான இந்த சீனப்பிரஜை, சில இளை ஞர்களின் உதவியுடன் எனது கணினி தொலைந்துவிட்டது.

அதனை மீட்டுத்தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட பதாகையொன்றைத் தாங்கியவாறு கொழும்பு, கங்காராம பிரதேசத்தில் நின்றுள்ளார்.

இதனை பார்த்த சில இளைஞர்கள் அக்காட்சியைப் படம்பிடித்து பேஸ்புக்கில் பதிவிட்டதுடன், மேற்படி சீனப்பிரஜையின் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தப் பதிவு பலரால் பரிமாறப்பட்டு, இறுதியாக மடிக்கணினி தவறவிடப்பட்ட ஓட்டோவின் சாரதியின் கைகளுக்கு கிட்டியுள்ளது. இதனை யடுத்து, அச்சாரதி சீனப்பிரஜையை தொலைபேசியில் தொடர்புகொண்டு அவரது வீட்டுக்குச் சென்று மடிக்கணினியைக் கையளித்துள்ளார்.

தனது கணினி கிடைத்த சந்தோசத்தில் அந்த சீனாக்காரர், சாரதிக்கு 30 ஆயிரம் ரூபாவை சன்மானமாக வழங்கியுள்ளார்.

அத்துடன், தனது மடிக்கணினி திரும்பக் கிடைப்பதற்கு உதவி செய்த இலங்கை நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தும், ஓட்டோ சாரதியுடன் எடுத்துக்கொண்ட படத்தையும் இந்த சீனர் தனது பேஸ்புக்கில் பதிவேற்றியுள்ளார்.

# ஏறாவூர் கடலில் சிக்கிய இராட்சத திருக்கை மீன்!

மூவாயிரம் கிலோ கிராம் எடையுடைய இராட்சத திருக்கை மீன் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை ஏறாவூர் – சவுக்கடி கடலில் மீனவ வலையில் சிக்கியுள்ளது.

இதன் பெறுமதி சுமார் ஒன்பது லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கே. வைரமுத்துஎன்பவரது இழுவை வலையில் சிக்கிய இந்த மீனை கரை சேர்ப்பதில் மீனவர்கள் பெரும் சிரமப்பட்டனர். இந்த மீன் துண்டங்களாக வெட்டப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்



றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சமீப நாள்களில் அசாதாரண கால நிலை காரணமாக மீன்கள் குறைவாக சிக்குகின்றபோதிலும் எதிர்பாராதவிதமாக இவ்வாறான இராட்சத மீன் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்னேரியாவில் காட்டுத் தீ ; 6 ஏக்கர் காணி தீக்கிரை!

மின்னேரியா வனப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயால் வனாந்தரப் பகுயின் சுமார் 06 ஏக்கர் காணிகள் தீக்கிரையாகியுள்ள ன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் தீ விபத்தை மின்னோரியா பொலிஸார், தமன்கடுவ தீயணைப்பு படையினர் மற்றும் இராணுவ தீயணைப்பு படையினர்ஆகியோர்இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இருப்பினும் வனாந்தரப் பகுதியின் 06 ஏக்கர் காணி தீக்கிரையாகியுள்ளதாகவும் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லைஎனவும்பொலிஸ் ஊடகம்மேலும்தெரிவித்துள்ளது.

## தினசரி ராசி பலன் (14.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 29 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. சதுர்த்தித் திதி காலை 3.28 மணி வரை பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: உத்தரம் மாலை 5.22 வரை பின்னர் அத்தம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 3.21 மணி முதல் 4.54 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.35 மணி முதல் 12.05 மணி வரை.

இன்று சதுர்த்தி விரதம்

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை சதுர்த்தி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- உத்தரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்புகள் நன்மையைத் தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**ரிஷபம்** நன்மையான நாள். பொருளாதார வளம் மேம்படும். தொழிலில் விருத்தி உண்டாகும். பெண்கள் தொழிற்பயிற்சியைக் கற்றுத் தேர்ந்து வங்கி மூலம் கடன் வசதிகளைப் பெறுவார்கள்.

**மிதுனம்** கவலையான நாள். வருமானம் குறையும். உத்தியோகத்தவர்களுக்கு பணியின் போது பல இடையூறுகள் வந்து மறையும். வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். இவர்களின் சுறுசுறுப்பான செயல்பாடுகளில் தடை உண்டாகும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருந்து வரும். வேலை பார்க்கும் இடத்தில் பல சோதனைகள் வரும். தேக சுகம் பாதிப்படையும்.

**சிம்மம்** ஆக்கபூர்வமான நாள் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். நீண்ட காலப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். தொழிலில் அன்பான அனுசரிப்பு அனைவரையும் கவரும். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் அடைவார்கள்.

**கன்னி** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். வியாபாரத் தொழில் முன்னேற்றமடையும். அரசாங்க அதிகாரிகளின் உதவி கிடைக்கும். தாய் வழிச் சொத்துக்கள் வந்து சேரும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**துலாம்** இன்பமான நாள். பொருளாதாரம் மனநிறைவைத் தரும். குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். பல நாள் பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** இனிமையான நாள். பணப் புழக்கம் திருப்தியை தரும். குடும்பத்தில் நல்லுறவு நீடிக்கும். ஆடை அணிமணிகள் சேரும். சிலருக்கு புதிய தொழில் வாய்ப்பு கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் சுமுகமாக நடக்கும்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தொழில் பல கஷ்டங்களை சந்தித்தாலும் கடைசியில் நன்மையைப் பெறுவார்கள்.

**மகரம்** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி மேலோங்கும். வெளிநாட்டு உறவினர் வரவால் ஆதாயம் உண்டாகும். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

**கும்பம்** துயரமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். உறவினர்கள் பாராமுகம் காட்டுவார்கள். தொழிலில் மந்த நிலை உண்டாகும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருள் வளம், தொழில் வளம் சிறப்படையும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். வியாபாரத் தொழில் துரித வளர்ச்சி அடையும். உத்தியோக உயர்வுகள் எதிர்பாராத வகையில் கிடைக்கும்.

சந்திராஷ்டம நாள்; **அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**



**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில், செஞ்சோலை மாணவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவு நாள் வன்னிக் குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று நடைபெறவுள்ளது.**

# 52 சிறார்கள் உட்பட 62 பேரை குண்டுவீசி கொன்ற கொடூரம்!

## செஞ்சோலை படுகொலை 12 ஆம் ஆண்டு நினைவு நாள்



வன்னியில் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தில் இலங்கை அரசின் மிலேச்சத்தன மான குண்டு வீச்சினால் 52 சிறார்கள் உட்பட 62 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமிழரின் நீண்ட சோக வரலாற்றில் 2006 ஓகஸ்ட் 14ஆம் திகதி பௌத்த சிங்கள பேரினவாதப் படைகளின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களால் பரிதாபகரமாகக் கொல்லப்பட்ட 62 பிஞ்சுகளின் குருதியால் எழுதப்பட்டுள்ளது. நான்கு மாத பச்சிளம் குழந்தையை கண்முன்னே துடிதுடிக்க சுட்டுக்கொல்லும் வெறிபிடித்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு இதுவொரு பொருட்டாக இல்லாது போனாலும் அழுது- அழுது- ஆறமுடியாமல் அகதிகளாய் அலையும் தமிழினத்தால் இதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியில்லையென்றே கூற வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனத்தில் செஞ்சோலை' சிறுமிகள் இல்லத்தின் வளாகமொன்றுள்ளது. இந்த வளாகமே 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கண்மூடித்தனமான வான் தாக்குதல்களுக்கு இலக்காகியது. பேரினவாத அரச படைகளின் அதிவேக யுத்த விமானங்கள் மிலேச்சத்தனமாக வீசிய குண்டுகள் 61 பாடசாலை மாணவிகளின் உயிர்களை பறித்ததுடன் 155 இற்கும் அதிகமான மாணவிகள் படுகாயமடைய நேர்ந்தது.

செஞ்சோலை வளாகத்தில் அப்பாவி மாணவிகளைஸ்ரீலங்காப்படைகொன்றது மாத்திரமல்லாமல் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள்ள சிறுவர் போராளிகளெனக் கூறி வெளியுலகுக்கு உண்மையை மூடிமறைக்க அரசாங்கம் முயன்றது அனைவரையும் ஆத்திரமடையச் செய்தது.

செஞ்சோலை வளாகம் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் என்றும் அங்கு சிறுவயது போராளிகளே இருந்தனர் என்று கூறி 2004 ஆம் ஆண்டு தமது விமானமொன்று எடுத்த படமொன்றையும் காட்டி இருந்தன அரச படைகள். இதைவிட ஒருபடி மேலே சென்ற பேரினவாத அரசின் அன்றைய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல "கொல்லப்பட்டவர்கள் சிறுவயதுபோராளிகள். அரசுக்கெதிராக செயற்படும் எவராயினும் அதாவது வயது, பால் வேறுபாடின்றி கொல்வோம்" எனக் கெக்கரித்தது நினைவுக்கு வருகின்றது. ஆனால், சம்பவ இடத்திற்கும் மருத்துவமனைகளுக்கும் ; நேரடியாக சென்று விசாரணைகளை மேற்கொண்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும், யுனிசெப் அமைப்பும் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி மாணவிகள் என்பதனை வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மலையகத்தில் கடும் மழை, மண்சரிவு; போக்குவரத்து முற்றாகத் துண்டிப்பு!



மலையகத்தில் பல பகுதிகளுக்கு தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு ஒரு சில இடங்களில் போக்குவரத்து முற்றாகத் துண்டிக் கப்பட்டுள்ளன.

ஹற்றன் சலங்கந்த பிரதான வீதி யில் நேற்று அதிகாலை 6.30 மணி யளவில எட்லி பகுதியில் ஏற்பட்ட ம ண்சரிவினால் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக் கப்பட்டுள்ளன.

இதேவேளை, எட்லி தோட்டத்தில் நேற்று அதிகாலை 3.30 மணியள வில் பெரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந் ததன் காரணமாக இந்த வீட்டின் ஒரு பகுதி அளவு சேதமடைந்துள்ளது டன் இங்கு வாழும் 32 குடும்பங்கள் ஆபத்தான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

ஹற்றன், பொகவந்தலாவ பிர தான வீதியில் ஹற்றன் அலுத்கம பகுதியில் காலை ஏற்பட்ட மண்சரி வினால் அவ்விடத்தில் ஒரு வழி போக்குவரத்து மாத்திரமே இடம் பெற்று வருகின்றது.

நீரேந்தும் பிரதேசங்களுக்கு பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிக விரைவாக உயர்ந்து வரு வதாக தெரிவிக்கப்படுகிறது. பல இடங்களில் கடும் காற்று காரண மாக மரம்கள் முறிந்து வீழ்ந்துள் ளமையால் அடிக்கடி மின்சார துண் டிப்புப் ஏற்பட்டு வருகின்றது.

தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக கட்டட தொழிலா ளர்கள் வேலைகளை மேற்கொள்ள முடியாது பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளனர். அடை மழைகாரணமாக தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வருகை குறைவடைந்துள் ளதுடன், தேயிலை உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள் ளது.

தொடர்ச்சியாக மலையகத்தில் பல பகுதிகளுக்கு கடும் காற்றுடன் தொடர்மழை பெய்து வருவதனாலும், மலை பகுதிகளில் காணப்படும் பல வீதிகளில் மண்சரிவு அபாயம் காணப் படுவதனாலும் வாகன சாரதிகள் அவதானமாக தமது வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலி ஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# குவைத்தில் வீசிய மணல் புயலில் சிக்கி இலங்கை பணிப் பெண் ஒருவர் பலி!

குவைத்தில் வீசிய மணல் புயலில் சிக்கி இலங்கைப் பணிப் பெண் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

குருநாகல், மடஹபொல பிர தேசத்தைச் சேர்ந்த சந்தியா குமாரி என்ற 42 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் கடந்த 4 மாதங் களுக்கு முன்னரே குவைத்துக்குப் பணிப் பெண்ணாகச் சென்றிருந்தார் என அவரது கணவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்த பெண் குவைத்தில் சேவை செய்த வீட்டில் உள்ள குடும்ப உறுப் பினர்களுடன் சுற்றுலா பயணித்தில் ஈடுபட்டுள்ளார். பாலைவனம் ஒன் றுக்கு நடுவில் வீசிய மணல் புயலில் சிக்கி அவர்கள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதி இடம் பெற்ற இந்த விபத்தில் சிக்கிய தனது மனைவி உயிரிழந்துள்ளார் என முகவர் நிலையம் ஊடாக தனக்கு அறிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

உயிரிழந்த பெண் இதற்கு முன் னர் 3 சந்தர்ப்பங்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிக்காகச் சென்றவர் என விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கடந்த 9ஆம் திகதி விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பில் இடம்பெற்ற மரண விசாரணையில் விபத்தினாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புனித ஹஜ் பெருநாளுக்கான திகதி அறிவிப்பு!

கொழும்பு, ஓக. 14

புனித துல் ஹஜ் மாதத்திற்கான புனித தலைப்பிறை தென்பட்டுள்ளமையினால் இம்மாதம் 22 ஆம் திகதி புனித ஹஜ் பெரு நாள் கொண்டாடப்பட உள்ளது என கொழும்பு பெரிய பள்ளிவாசல் தெரிவித்துள்ளது.

கொழும்பு பெரிய பள்ளி வாசலின் பிறைக் குழு பிரதித் தலைவரின் தலைமையில் நேற்றுமுன்தினம் தலைப் பிறை பார்க்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் தலைப் பிறை தென்பட்டமையினால் இம் மாதம் 22 ஆம் திகதி புனித ஹஜ் பெருநாளை கொண்டாடலாம் எனக் கொழும்பு பெரிய பள்ளிவாசல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மத்துகம சம்பவம் ; மூவருக்கு மறியல்!

மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணிக் கொட பகுதியில் காரில் பயணித்துக் கொண் டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி ஒருவரை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைதுசெய் யப்பட்டுள்ளனர் என மத்து கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி யடதொல – அளுத்கம வீதியில் மணிக்கொட பகுதியில் சூதாட்ட கும்ப லொன்று காரில் பயணித்துக் கொண்டிருந்த போது வானில் வந்த முகமூடி அணிந்த கும் பல் அவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலி னால் மூவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வாவத்த வைத்தியசாலையில் சேர் க்கப்பட்டனர்.

இதன் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மூவரில் பனிகல குருளுபத்த பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை முன் னெடுத்த மதுகம குற்றத்தடுப்பு பிரிவு பொலி ஸார் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரை மத்துகம பகுதியில் வைத்து கடந்த 11 ஆம் திகதி கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை மத்துகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத் திய போது நீதிவான் அவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்டார்.

# சுகாதார பதிலீட்டு தொழிலாளர்களுக்கான நியமனம்

காத்தான்குடி நகர சபையினால் சுகாதார பதிலீட்டு தொழிலாளர்களுக்கான நியமனங் கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தலைமை யில் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றுள் ளது.

இதன்போது, சுகாதார பதிலீட்டு தொழிலா ளர்கள், காவலாளிகள், சாரதிகள் என 57 பேருக்கு இந்த தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் காத்தான்குடி நகர சபை உறுப்பினர்களான கே.எல்.எம்.பரீட், எம்.ஐ. ஜவாஹிர், ஏ.எல்.பெளமி, எம்.ஜாபீர், ஏ.எம். அமீர் அலி சல்மா ஹம்சா நகர சபை செயலா ளர் திருமதி றிப்கா பீன் உட்பட உத்தியோகத்தர் களும் கலந்துகொண்டனர்.



புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ள சுகாதார பதிலீட்டு தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக நாளொன்றுக்கு 500 ரூபா வழங்கப்படுவதுடன், எதிர் காலத்தில் காத்தான்குடி நகர சபையின் ஆளணிக் கேற்ப நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப் படும் என காத்தான்குடி நகர சபை தவிசா ளர் எஸ்.எச்.அஸ்பர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறைச்சாலை உத்தியோகத்தர் சிலர் நாள் ஒன்றுக்க ரூ. 2,500 கையூட்டலை வருமானமாக ஈட்டுகிறார்கள்!

## நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவிப்பு



சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிலர் நாள் ஒன்றுக்க 2500 ரூபா கையூட்டலை வருமானமாக ஈட்டுகின்றார்கள் என நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள் ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில் –

அண்மையில் நடத்தப்பட்ட விசாரணை களின் மூலம் சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இவ்வாறு கையூட்டல் பெறுவது தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைகளில் பணிகள் சீரான முறையில் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதனை கண்காணிப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒரு பெண் சிறைச்சாலை அதிகாரி கைதி களிடமிருந்து பெருந்தொகை கையூட்ட லாக பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த பெண் அதிகாரி உள்ளிட்ட 12 அதி காரிகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

# விமான எரிபொருள் விலையிடல் தொடர்பில் சர்வதேச போக்குவரத்து சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 14

விமானங்களுக்கான எரிபொருள் விலையிடல் தொடர்பில் இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனத்தின் வெளிப் படையற்ற தன்மை குறித்து சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் கண்ட னம் தெரிவித்துள்ளது.

மேலும் வெளிப்படை தன்மையுள்ள விலை சூத்திரத்தை முன்னெடுக்க சர்வ தேச விமான போக்குவரத்து சங்கம் அழைப்பு விடுத்துள்ளதுடன், மீள எரி பொருளை ஏற்றுவது தொடர்பிலான செலவின அதிகரிப்பானது விமான தொழிற்றுறையை திணறச் செய்யும் ஒன்றாகவுள்ள து என்றும் குறிப்பிட்டுள் ளது.

உலக விமான சேவைகள் ஒன்றி யத்தைச் சேர்ந்த குழுவொன்று இலங் கைக்கு விஜயம் செய்து இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனத்தை சேர்ந்த அதி காரிகள் உள்ளடங்கலான உத்தியோகத்தர் களை சந்தித்து ஏனைய ஆசிய விமான நிலையங்களிலான விமான எரிபொருள் விலையை விடவும் இங்கு விமான எரி பொருள் விலை குறிப்பிடத்தக்க அள வில் உயர்வாக உள்ளதை சுட்டிக்காட்டி யுள்ளது.

உதாரணத்திற்கு இலங்கையிலான விமான எரிபொருள் விலைசிங்கப்பூரி லுள்ளதை விடவும் 21 சதவீதம் அதிகமா கவும் ஹொங்கொங்கிலுள்ளதை விடவும் 13 சதவீதம் அதிகமாகவும் பெங்களூரி லுள்ளதை விடவும் 8 சதவீதம் அதிகமா கவும் உள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மாதாந்த விலைகள் அரபு வளைகுடா 'மொபக்' அமைப்பின் விலைகளுக்கு ஒத் திசைவாக இருக்கின்ற அதேசமயம் எரி பொருள் விலைகளிலான இடைவெளி முரணானதாகவுள்ளதை அவதானிக்க முடிவதாக சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் கூறுகிறது.

சில சந்தர்ப்பங்களில் சர்வதேச எரி பொருள் குறிகாட்டியாகவுள்ள மொபக் கின் விலை சரிவடையும் காலத்திலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது விலைகளை தொடர்ந்து பேணி வந்துள்ளதாகவும் ஏக விநியோகஸ்தர் என்ற வகையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விலைகளிலான வெளிப் படை தன்மையை பேணாமல் தான் தெரிவு செய்த விலைகளை நிர்ணயிக்கக் கூடிய நிலை காணப்படுவதாகவும் அந்த சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

அதிகரித்த விலை இலங்கையின் விமான நிலையத்தையும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையையும் பாதிப்பதாகவுள்ளது என அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

(கு)

காலைக்கதிர் Kalaikkathir



# பல மாவட்டங்களிலும் நிலவும் தமிழ்மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தீர்வுகாண நடவடிக்கை



நாட்டின் பல மாவட்டங்களிலும் நிலவும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு தீர்வு காண்பது பற்றி அரசு கவனம் செலுத்தியுள்ளது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங் களுக்கு நிலவும் ஆசிரியர் வெற்றிடத்திற்கு தீர்வுகாணும் நோக்கில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் சேவைகளை பெற்றுக் கொள்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுபற்றி தேசிய மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் உயர்தர பௌதீக விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகள் ஒரு பாடசாலையில் மாத்திரமே இயங்குகிறது என மாவட்ட செயலாளர் மஹிந்த வீரசூரிய தெரிவித்தார்.

கணித, விஞ்ஞான பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் இதற்கான காரணமாகும். பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு தொழில்பயிற்சியை வழங்குவது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

## இனி இது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினங்களுக்கு முன்னர் பேட்டியளித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சில விடயங்களைக் கூறியுள்ளார்.

*“நாங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்போம் வாருங்கள் என்று பிரபாகரனுக்கு நான் ஒரு செய்தி அனுப்பினேன். ‘விருப்பம் என்றால் நீங்களே கொழும்புக்கு வந்து பேசலாம். இல்லையேல் நானே கிளிநொச்சிக்கு நேரில் வரத் தயார். நாங்கள் பேசுவோம். வன்முறைகளை நிறுத்துங்கள். அப்பாவி மக்களைக் கொல்லாதீர்கள். ஆயுதப் படைகளைத் தாக்காதீர்கள். சுடுவதையும், கொல்வதையும் நீங்கள் நிறுத்தாவிடின் உங்களை இல்லாதொழிக்க நான் கட்டளையிடுவேன் ’ என்று 2006 தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் நான் கூறினேன்.”*

– இவ்வாறு அந்த உரையாடலின்போது குறிப்பிட்டிருக்கின்றார் மஹிந்தர்.

இந்தப் பேட்டியில் அவர் கூறிய விடயங்கள் உண்மை. ஆனால் இந்தச் சொல்லாடலில் அவர் பயன்படுத்திய சொற்கள் வேறு. இவ்வாறு அச்சுறுத்தும் தொனியில் அந்தச் செய்தியை அவர் அனுப்பவில்லை.

ஏனெனில், இந்தச் செய்தியை என் மூலமே அவர் விடுதலைப் புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தினார். நானே அந்தச் செய்தியை எடுத்துச் சென்றேன் என்பதனால் எனக்கு அது பற்றிய வாசகங்கள் நன்கு நினைவில் இருக்கின்றன.

பழைய குறிப்புகள், செய்தி நறுக்குகள் ஏதும் என் கைவசம் இல்லாத நிலையில், வெறும் நினைவில் பதிந்துள்ளவற்றை வைத்துக் கொண்டு மட்டுமே இன்று இந்தப் பத்தியை வரைகிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சமாதானச் செய்தியை ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் புலிகளின் தலைமைக்கு எடுத்துச் சென்றேன்.

முதல் தடவை 2006 ஜனவரியில் நடந்தது. அந்த முயற்சியே பின்னர் அரசு – புலிகள், ஜெனீவா முதலாம் சுற்றுப் பேச்சுக்கு வழி திறந்தது.

முதல் தடவை என்னை அலரி மாளிகைக்கு அழைத்துப் பேசிய ஜனாதிபதி மஹிந்தர் “எப்படியாயினும் புலிகளோடு சமாதானமாகப் பேசித் தீர்க்க வேண்டும். நான் என்ன கூறினால், புலிகள் பேச்சுக்கு வருவார்கள் என்று நீர் கருதுகின்றீரோ அவற்றை நான் கூறினேன் என உங்கள் பத்திரிகையில் எனது செவ்வியாக நீராகவே எழுதலாம். அப்படி நீர் எழுதுவதற்கு நான் உமக்கு முழு சுதந்திரம் தருகிறேன். என்னுடன் நேரில் பேசித் தீர்க்கலாம். பிரபாகரன் விரும்பினால் கொழும்புக்கு வரலாம். இல்லையேல் நானே அவரைத் தேடி முல்லைத்தீவுக்கு (அவர் அப்போது கிளிநொச்சி என்றுகுறிப்பிடவில்லை) வருவேன் என்று சொல்லுங்கள்.” – என்றார்.

“இன்றிரவு அன்டன் பாலசிங்கம் கட்டுநாயக்கா வந்து சேருகிறார். அவர் நாளை காலையில் தான் ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சி புறப்படுவார். அதற்கு முன்னர் அவரைச் சந்தியுங்கள். விளக்கமாக என் பேச்சு முயற்சி குறித்து அவருக்கு விளக்குங்கள். நீங்கள் கூறினால் அவர் செவிமடுப்பார். உங்கள் கருத்து அவரிடம் எடுபடும்.” – என்று கூறிய மஹிந்த ராஜபக்ஷ, என் முன்னாலேயே தமது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

“கோட்டா...!” என்று விளித்தபடி பேச்சை ஆரம்பித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இன்ன பத்திரிகைகளின் ஆசிரியரான இன்னார் தமக்கு முன்னால் இருக்கின்றார் எனக் குறிப்பிட்டார்.

“அவர் இப்போது எனது செவ்வி ஒன்றைத் தமது அலுவலகத்துக்குக் கொடுப்பதற்காக அங்கு போய்க் கொண்டிருக்கின்றார். இரவு பாலசிங்கம் கட்டுநாயக்கா வந்திறங்கியதும் பாலாவை அவர் சந்தித்துப் பேச வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அவரது தொலைபேசி இலக்கத்தைச் சொல்லுகிறேன். குறித்துக் கொள்ளுங்கள்” – என்று தம்பியாரை அறிவுறுத்தினார் ஜனாதிபதி மஹிந்த.

அதன் பின்னர் சகோதரர் கூறியவற்றை செவிமடுத்த மஹிந்த, ஜனாதிபதியின் பதவி நிலை குறிப்பிட்ட தமது சிறிய கடிதத் தலைப்பில் ஒரு தொலைபேசி இலக்கத்தைத் தமது சகோதரரிடமிருந்து கேட்டுக் குறித்துக் கொண்டார்.

“இது விமானப் படைத் தளபதியின் தொலைபேசி இலக்கம். பாலாவுடனான சந்திப்புக்கு உங்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை அவர் செய்வார்.” – என்றார் மஹிந்தர்.

அடுத்த நாள் எனது பத்திரிகைகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ‘எக்ஸ்குளுசிவ்’ பேட்டி என்று குறிப்பிட்டு விசேட செவ்வி ஒன்றை தலைப்புச் செய்தியாக வெளியிட்டேன்.

“புலிகளுடன் பேசித் தீர்வு காண நான் தயார். பிரபாகரன் கொழும்புக்கு வந்தும் பேசலாம். இல்லையேல் நானே முல்லைத் தீவுக்குச் சென்று பேசவும் தயார். பேச்சுக்காக – அமைதி எத்தனமாக – மேலும் ஒரு மைல் கூடுதலாக நடக்கவும் நான் தயார். ஈழம் தர முடியாது. ஆனால் 13 ஆவது திருத்தத்தையும் தாண்டித் தாராளமாக விட்டுக் கொடுக்க நான் தயாராகவே உள்ளேன். இதுவரை பதினொரு வருடங்கள் சந்திரிகாவைப் பொறுத்து சகித்துக் கொண்ட நீங்கள் (விடுதலைப் புலிகள்) என்னைப் பதினொரு மணித்தியாலங்கள் கூட சகித்துக் கொண்டீர்களா? இல்லையே. அதற்கு முதலிலேயே தாக்கத் தொடங்கி விட்டீர்களே. இது நியாயமா?” – என்ற சாரப்பட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகுந்த ஆதங்கத்துடன் கருத்துத் தெரிவிப்பது போன்ற வகையில் அந்தப் பேட்டி அமைந்தது.

மஹிந்தரைச் சந்தித்த அன்றிரவு, கட்டுநாயக்காவுக்கு எனது காரிலேயே தனித்துச் சென்றேன். விமான நிலைய ஹோட்டல் அறையில் அன்டன் பாலசிங்கம் – அடேல் பாலசிங்கம் தம்பதியரைச் சந்தித்தேன். ஆறு மணி நேரம் எங்கள் உரையாடல் நீடித்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த பல தகவல்களை பாலா அண்ணனுக்கு எடுத்துரைத்தேன். என் கருத்துக்களை செவிமடுத்த அவர் சாதக, பாதகங்கள் குறித்து என்னுடன் கலந்துரையாடினார். பேச்சை ஆரம்பிக்க வேண்டிய தருணம் வந்து விட்டதாக அவரும் கருதினார்.

அடுத்த நாள் காலையில் எனது பத்திரிகைகளில் மஹிந்தவின் பேட்டி பரபரப்பாக வெளியாகியது. புலிகள் தரப்பில் யுத்தத்துக்கு முனைப்பாக நின்ற சில தரப்புக்களை, சமாதானப்பேச்சுக்கு கட்டாயப்படுத்துவது போன்று அமைந்த அந்தச் செவ்வி சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கும் போல. அவற்றின் பின்புலத்துடன் இயங்கிய இணையத்தளம் ஒன்றில், எனது பத்திரிகையின் பெயர் குறிப்பிட்டு ‘அது (பத்திரிகையின் பெயர்) அலரிமாளிகையில் மதி கெட்டது’ என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியானது. நான் அலரி மாளிகைக்குப் போய் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் குடித்துக் கும்மாளமிட்டு விட்டு, அவரின் விருப்புக்கு ஏற்ப பேட்டி ஒன்றைப் பிரசுரித்து, புலிகளின் இராணுவச் செயற்பாட்டுக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றேன் என்ற சாரப்பட அந்தச் செய்தி அமைந்திருந்தது.

அந்தச் செய்தியின் மொழி பெயர்ப்பை அவதானித்த ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டார். புலிகளுடன் எனக்கு ஏதேனும் சிக்கலா, அமைதி முயற்சிக்குப் புலிகள் பாதகமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனரா என்றெல்லாம் வினாவினார்.

மேற்படி செய்தி இணையத்தில் வெளியான சில மணி நேரங்களிலேயே தலைவர் பிரபாகரன் மற்றும் அன்டன் பாலசிங்கம் ஆகியோர் தலையிட்டு அந்தச் செய்தியை அகற்றச் செய்து விட்டனர் என்ற தகவலை நான் அவருக்குத் தெரியப்படுத்தினேன்.

அதன் பின்னர் புலிகள் பேச்சுக்கு இணங்கியமை பற்றிய செய்தியை கிளிநொச்சியிலிருந்து தொலைபேசி மூலம் நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெரியப்படுத்தியமையும், அதன் பின்னர் மீண்டும் நோர்வேத் தரப்பு உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை முன்னெடுத்தமையும் ‘ஜெனீவா – I’ பேச்சுகள் கட்டவிழ்ந்தமையும் தொடர்ந்து நடந்த விடயங்கள்.

அவற்றுக்குள்ளும் பல இராஜதந்திர நுட்பங்கள், இரகசியங்கள், உள்ளாந்தங்கள், திருப்புமுனைகள், பரபரப்புத் தகவல்கள் உள்ளன. நீண்ட நெடும் தொடராக விவரங்களோடு வரையப்பட வேண்டியவை அவை.

அடுத்த பேச்சு முயற்சி – என் நினைவு சரி என்றால் 2006 ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் திகதி நடந்தது.

2006 பெப்ரவரியில் நடைபெற்ற ‘ஜெனீவா – I’ பேச்சுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் நேரடி மோதல் வெடித்து பெரும் போருக்கு இரு தரப்புகளும் தயாராகிக் கொண்டிருந்த சமயத்தில் அந்த அழைப்பு ஜனாதிபதி மஹிந்தரிடம் இருந்து எனக்கு வந்தது.

இதுவும், சமாதானப் பேச்சுக்களை மீளப் புலிகளுடன் ஆரம்பிக் கும் நோக்குடன் மஹிந்த விடுத்த அழைப்புத்தான்.

“ஆற்றாமையின் உச்சத்தில் இன்ன பத்திரிகை ஆசிரியருக்கு மஹிந்த விடுத்த தொலைபேசி அழைப்பு” என்று ஆரம்பித்து இந்த விவகாரத்தை ‘த சண்டே லீடர்’ பத்திரிகையின் ஆசிரியரும் பின்னர் இரண்டரை ஆண்டுகள் கழித்துப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளருமான லஸந்த விக்கிரமதுங்க, சொல்லுக்குச் சொல் முழு விவரமாக அம்பலப்படுத்த எனக்கும் பின்நாள்களில் பலத்த சிக் கல்கள் ஏற்பட்டன.

அப்போது கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த கருணா அணியை இரண்டு வாரங்களுக்கு முகாம்களுக்குள் முடக்கி வைத்துக் கொண்டு – நோர்வேயையும் புறம்தள்ளி ஒதுக்கிவிட்டு – அரசுப் பிரதிநிதிகளும் புலிகளின் பிரதிநிதிகளும் முதலில் இரகசியமாக நேரடியாகப் பேசி இணக்க நிலையை ஏற்படுத்துவது என்றும் –

அந்தப் பேச்சில் பரஸ்பரம் நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்திக் கொண்டு அதன் பின்னர் அந்தப் பேச்சை விரிவுபடுத்தலாம் என்றும் –

தெரிவிக்கும் யோசனை ஒன்றை என் மூலம் புலிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுப்பி னார் எனவும், அதற்கான புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனின் பதிலை ஜூன் 24 ஆம் திகதி நான் எழுத்து மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தினேன் எனவும் லஸந்த அந்தச் செய்தியில் விவரித்திருந்தார்.

இந்த விடயத்தை ஒட்டி ஜனாதிபதி மஹிந்த தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலடி தரும் விதத்தில், பாலசிங்கம் குறிப்பிட்ட விளக்கங்களை இந்த முயற்சியின்போது நான் ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தேன் என்றும் அந்தச் செய்தி விவரணத்தில் லஸந்த குறிப்பிட்டார்.

‘ஜெனீவா – I’ பேச்சுகளின் போது முதல் நாளிலேயே பேச்சு முறிவடையும் சூழல் ஏற்பட்டமையையும், பேச்சு மேசைக்கு வெளியே – தனியாக – இரகசியமாக – எனது ஏற்பாட்டில் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்துக்கும் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கும் இடையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் மூலம் முட்டுக்கட்டை நிலை நீக்கப்பட்டமை குறித்தும் கூட அந்தச் செய்தி விவரணத்தில் லஸந்த விக்கிரமதுங்க குறிப்பிடத் தவறவில்லை.

இந்தச் செய்திகள் அம்பலமானமையை அடுத்து எனது பாதுகாப்புக்காக கொழும்பில் எனது இல்லம் அமைந்திருந்த அடுக்குமாடிக் கட்டடத் தொகுதிக்கு ஐவருக்குக் குறையாத பொலிஸ் பாதுகாப்பு அணியை சில காலம் நிறுத்த வேண்டிய கட்டாயம் மஹிந்த அரசுக்கு வந்தது.

முன்னர் நான் குறிப்பிட்டமை போல இந்த விடயங்கள் எல்லாம் விலாவாரியாக திகதி நேரங்களோடு – நுட்பமான அம்சங்களோடு – விளக்கமாக வரையப்பட வேண்டியவை. ஆழமான பல அம்சங்கள் நிறைந்த அவ் விவரங்களை விரைவில் வாசகர்களுடன் தனியாகப் பகிர்வேன்.

ஆனால், இப்போது மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுகின்றமை போல மிரட்டல் தொனியில் விடுதலைப் புலிகளை அவர் பேச்சுக்கு அழைக்கவில்லை. நட்புரிமையோடு, சமாதானமாக – அமைதியாக – தீர்வு காண முயற்சிக்கும் தலைவர் போலவே அந்த அழைப்பை அவர் முன்வைத்தார்.

ஆனால், அந்த அழைப்பின் உள்நோக்கம் யாது என்பதை பின் நாள்களில் என்னால் கூட்டிக் கழித்துப் பார்த்து, பகுத்தாய்ந்து முடிவு கட்டக் கூடியதாக இருந்தது.

கட்டுநாயக்கா படைத் தளத் தாக்குதலோடு இராணுவ மேலாதிக்க நிலையில் வலுவாகப் புலிகள் இருந்த சமயத்தில்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் ஜனாதிபதி மஹிந்தர்.

பின்னடைவைக் கண்டுவரும் தனது அரசுப் படைகள் புலிகளோடு சமதையாக நின்று மோதுவதாயின் அதற்கு அரசுப் படைகளைத் தாம் தயார் செய்ய வேண்டும். தேவையான ஆயுதங்களை வாங்கிக் குவிக்க வேண்டும். சர்வதேச ஆதவை அரசு தனக்கு சார்பாகத் திரட்ட வேண்டும். இவற்றையெல்லாம் தாம் செய்வதற்குத் தமக்கு கால அவகாசம் தேவை என உணர்ந்த மஹிந்தர் அதற்காக எடுத்த எத்தனமே பேச்ச முயற்சி. அது அவரது தந்திரம்.

இப்போது அவர் கூறுகின்றமை போல, துணிச்சலின் உச்சத்தில் நின்று கொண்டு அந்த சமாதான அழைப்பை அவர் விடுக்கவில்லை. நரித் தந்திரத் திட்டத்தின் ஓரங்கமாகவே அதை அவர் விடுத்தார் என்பதே உண்மை.

தனியான கட்டுரைத் தொடரில் அந்த விவரங்களை மிக விரிவாக விரைவில் பார்ப்போம்.

-மின்னல் -

# தமிழ் தலைவனின் மரணத்தை கொண்டாடும் வக்கிர மனநிலை!

● கருணாகரன்



கடந்த 7 ஆம் திகதி மாலை 6.40 அளவில் கிளிநொச்சி நகரத்தில் பட்டாசுகள் வெடித்தன. அந்த நேரம் எதற்காக இப்படித் திடீரென வெடி கொளுத்துகிறார்கள் என்று பக்கத்தில் நின்ற கடைக்காரரைக் கேட்டேன்.

அவருக்கும் விவரம் தெரியவில்லை. சற்று நேரத்தில் வெடிச்சத்தம் கேட்ட திசையிலிருந்து வந்தவர்களிடம் விசாரித்தோம். அது கருணாநிதி இறந்த சேதி அறிந்து வெடி கொளுத்துகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு போனார்கள்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு வெடிச் சத்தம் வந்த திசையை நோக்கிப் போனேன். அங்கே ஒரு கூட்டம் அமர்க்களமாக நின்றது. இரண்டாவது தடவையும் வெடியைக் கொளுத்தினார்கள்.

இது மேலும் கூட்டம் சேர்ந்ததால் நடந்தது. இங்கே பதிவிட விரும்பாத சில வார்த்தைகளைச் சொல்லி கருணாநிதியைத் திட்டினார்கள். திட்டித்திட்டிப் பாடினார்கள்.


கிட்ட நெருங்கி, யாராக இருக்கும் என்று பார்த்தேன். பலரையும் தெரியவில்லை. ஆனால் பெரும்பாலும் இளைஞர்கள். ஒரு இருபது பேர் வரையில் இருந்தார்கள்.

என்ன நடக்கிறது என்று அறிவதற்காக கொஞ்ச நேரம் அந்த இடத்திலேயே நின்றேன். அப்பொழுது இரண்டு தெரிந்த முகங்கள் அங்கே நின்றன.

அதில் ஒன்று, ஒரு காலம் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்று இவற்றோடு அல்லும் பகலும் அரசியலாகவே திரிந்த ஒருவரின் மகன்.

அவரைக் கண்டதும் எனக்குச் சிரிப்பும் கவலையும் ஒன்றாகவே வந்தன.

அந்த நாள்களில்அந்த நபர் தமிழரசுக்கட்சியின் துண்களில் ஒருவர்.



தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் என்றாலும் அவருடைய வீட்டில் அண்ணாத்துரை, கருணாநிதி இருவரின் படங்களும் முன் விறாந்தையில் இருந்தன.

தமிழரசுக் கட்சியைப் பற்றிக் கதைப்பதை விட தி.மு.கவைப் பற்றியும் அதனுடைய தமிழைப்பற்றியுமே கதைப்பார் அவரது தந்தை அண்ணாத்துரை மீதும் கருணாநிதி மேலும் பெரிய மரியாதையும் பற்றுமிருந்தனஅவருக்கு.

இருவரைப்பற்றியும் இருவருடைய பேச்சுகளைப் பற்றியும் எனக்கே பல தடவை சிலிக்கக்கூடிய கதைகள் சொல்லியிருக்கிறார்.

அப்படியானஒருவரின் வழி வந்த அவருடைய மகன் இப்பொழுது கருணாநிதியின் மரணத்தை வெடி கொளுத்திக் கொண்டாடுகிறார்.



இந்த நிலைக்குக் காரணம் என்ன? எங்கே நடந்தது தவறு? யார் தவறிழைத்தார்கள்? அதனவதுயார்குற்றவாளிகள்?

### அரசியலில் 60 ஆண்டுகள்

கருணாநிதியின் அரசியற் பங்களிப்புப் பெரியது. ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேலாக அவர் தமிழக அரசியலிலும் இந்திய அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தியிருக்கிறார்.

இதில்சாதனைகளும்உண்டு. பலவீனங்களும்உண்டு. அவை பற்றிய விமர்சனங்களும் மதிப்பீடுகளும் கருணாநிதி உயிரோடு இருந்த காலத்திலேயே – பதவி, அதிகாரத்தில் இருந்த போதெல்லாம் முன்வைக்கப் பட்டுள்ளன.

மிச்சம் மீதியும் இப்பொழுது அவருடைய மரணத்தைத் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன. எதிர்காலத்திலும் அவை தொடரும்.

வேறு எவரையும் விட மிக நீண்ட காலம் தமிழக – இந்திய அரசியலில் செல்வாக்குச் செலுத்தியவர் என்ற வகையில் இந்த விமர்சனங்களின் நீட்சி நிச்சயமாக இருந்தேதீரும். வரலாறு எல்லாவற்றையும் தன்னுடைய தராசில் வைத்து மதிப்பீட்டு உரிய அடையாளத்தைத் தரும்.

இதற்கப்பால் கருணாநிதியின் இன்னொரு அரசியல் பங்களிப்பும் உண்டு. அது ஈழவிடுதலை அரசியலில். இதிலும் கருணாநிதியின் வரலாறு சிறப்படையக் கூடிய பங்களிப்புகளும் உண்டு. அதே வேளை சிறுமைக்குரிய விசயங்களும் உள்ளன. இதையும் சேர்த்தே வரலாறு கருணாநிதியை மதிப்பிடும்.

ஆகவே அதற்கிடையில் யாரும் அவசரப்பட்டு, தங்களின் சொந்த விருப்பு வெறுப்புகளை முதன்மைப்படுத்தி, தி.மு.கவையோ கருணாநிதியையோ முழுதாகக் குற்றம் சாட்ட முடியாது. அதுவும் அவருடைய மரணச் சேதியறிந்து வெடிகொளுத்திக் கொண்டாடும் அளவுக்கு.

## அவர்கள் மனநோயாளிகள் அன்றி வேறில்லை

அப்படிச் செய்தால் அது அரசியல் மூடத்தனமன்றி வேறில்லை. ஒன்று, கடந்த கால வரலாற்றுச் சம்பவங்களை – அதில் தி.மு.கவும் கருணாநிதியும் செய்த பங்களிப்புகளை அறிந்திராத மடத்தனம். அறியாமை.

இரண்டாவது, எதிர்காலத்தில் ஈழத்தமிழரின் அரசியலுக்கு தி.மு.கவும் புதிய தலைமையும் செய்ய வேண்டிய பங்களிப்புகளுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவது.

இந்தத் தவறு, இத்தகைய மூடத்தனம் ஈழத்தமிழரின் அரசியலில் பலவகையிலும்தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.இதுவே ஈழத்தமிழரின் தொடர்ச்சியான அரசியல் பின்னடைவுகளுக்கான காரணங்களுமாகும்.

கருணாநிதியை நோக்கி குற்றம் சாட்ட நீளும் விரலுக்கு நிகரானது ஈழத்தமிழர்களின் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தவறுகளை நோக்கிநீள வேண்டிய விரல்கள்.

### இதற்கு யார் பொறுப்பேற்பது?

ஆனால், 1958 இல் இலங்கையில் தனிச்சிங்களச் சட்டத்தை பண்டாரநாயக்கா அறிவித்ததைக் கண்டித்து தி.மு.கவின் சிதம்பரம் மாநாட்டில் கண்டனத்தீர்மானம் நிறைவேற்றியவர் கருணாநிதி. அப்பொழுது கருணாநிதிக்கு வயது 34.

பிறகு 1961 இல் இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் விடுதலையை வலியுறுத்திப் பேரணி ஒன்றை நடத்தியது. இவ்வளக்கும் அப்பொழுது கருணாநிதியோ தி.மு.கவோ ஆட்சி அதிகாரத்தைக் கொண்ட பெருந்தரப்பல்ல.



தொடர்ந்து 1983 இல் இலங்கையில் நடத்தப்பட்ட இன வன்முறையைக் கண்டித்து கருணாநிதியும் அன்பழகனும் தங்களுடைய பதவிகளை ராஜினமாச் செய்திருந்தனர்.

தொடர்ந்து ஈழ ஆதரவு நிலைப்பாட்டுடன் இயக்கங்களுக்கான ஆதரவை வழங்கினார் கருணாநிதி. இதனை அன்று பல வழிகளிலும் தொடர்பாக இருந்தவர்களின் பதிவுகள் கருணாநிதியின் மரணத்தையொட்டி சாட்சியமாகப் பகிரங்கத்தளத்தில் பகிரங்கப்பட்டுள்ளன.

இதேவேளை துரதிருஷ்டவசமாக ஆயுதப்போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கி வந்த தமிழகச் சூழல் அப்பொழுதிருந்த தி.மு.க – அ.தி.மு.க (கருணாநிதி – எம்.ஜி. ஆர்) என்ற போட்டி அரசியலின் விளைவால் கெடுத்துக் கொண்டது.

எம்.ஜி. ஆர் விடுதலைப் புலிகளை தன்னுடன் இணைத்துக் கொண்டார். கருணாநிதி ரெலோவை அரவணைத்தார். ரெலோவுக்கு ஆதரவாக ஈழப் போராட்ட ஆதவு என்ற பேரில் டெஸோ என்ற மாநாட்டை மதுரையில் நடத்தினார் கருணாநிதி.

எம்.ஜி. ஆர் விடுதலைப் புலிகளை தன்னுடன் இணைத்துக் கொண்டார். கருணாநிதி ரெலோவை அரவணைத்தார். ரெலோவுக்கு ஆதரவாக ஈழப் போராட்ட ஆதவு என்ற பேரில் டெஸோ என்ற மாநாட்டை மதுரையில் நடத்தினார் கருணாநிதி. இந்த மாநாட்டில் வாஜ்பேய், தேவ கௌடா, என். டி.ராமராவ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். இதனால் அன்று இலங்கை இனப்பிரச்சினையும் ஈழப்போராட்டத்தின் அவசியமும் இந்திய அளவில் உணர்ந்து கொள்வதற்கு வாய்ப்புண்டானது.

இந்த மாநாட்டில் வாஜ்பேய், தேவ கௌடா, என். டி.ராமராவ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். இதனால் அன்று இலங்கை இனப்பிரச்சினையும் ஈழப்போராட்டத்தின் அவசியமும் இந்திய அளவில் உணர்ந்து கொள்வதற்கு வாய்ப்புண்டானது.

இதற்கிடையில் 1981 இல் பாண்டிபஜாரில் உமா மகேஸ்வரனும் பிரபாகரனும் சுடுபட்ட சம்பவம் தொடக்கம், சூளைமேட்டில் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் சூட்டுச் சம்பவம் தொடர்ந்து பத்மநாபா அணியின் படுகொலை, ராஜீவ் காந்தியின் படுகொலை என ஏராளம் நெருக்கடிகள் ஈழத்த மிழ்த்தரப்பிலிருந்து உண்டாக்கப் பட்டது.

தமிழகத்தை முழுதான அளவில் இந்தச் சம்பவங்கள் நெருக்கடிக்குள்ளாக்கின. இதனால் ஒரு கட்டத்தில் தி.மு.கவும் கருணாநிதியும் பதவியை இழந்தன. பின்னாளில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகக் கருணாநிதி நடந்து கொள்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டு, ஆட்சிக் கவிழ்ப்பு நடந்தது.

### தளம்பல் நிலையால்...!

இதற்குப் பிறகு கருணாநிதியின் ஈழ விடுதலைப் போராட்ட ஆதரவு – அணுகுமுறை போன்றவற்றில் தளம்பல்களும் தவறுகளும் நிகழத்தொடங்கின.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று தமிழக மற்றும் இந்தியச் சூழலில் அவர் செய்யத் தொடங்கியிருந்த அரசியல் சமரசங்களும் புதிய பொருத்தமற்ற கூட்டுகளுமாகும்.

இதனால் இந்தச் சக்திகளை மீறி, அவரால் தனித்துச் சுயமாக எந்த முடிவுகளையும் எடுக்க முடியவில்லை. மற்றவர்களின் முகத்தைப் பார்த்து எதையும் தீர்மானிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

(மிகுதி நாளை)

# தினமும் முட்டை சாப்பிடலாமா?

## தெரிந்து கொள்ளுங்கள்



பல்வேறு விவாதங்களின் மையப்பொருளாக முட்டை இருந்துள்ளது. சிலர் மஞ்சள் கருவை தவிர்த்து சாப்பிட்டால் ஆரோக்கியம் என்றும், சிலர் மஞ்சள் கருவுடன் சேர்த்து சாப்பிட்டால் ஆரோக்கியம் என்று கூறுகின்றனர். பல்வேறு விவாதங்களின் முடிவுக்கு பின்னர், நாம் அறிந்து கொள்வது மஞ்சள் கரு தொடர்ந்து உட்கொள்ளக்கூடாது. இதனால் கொழுப்பின் அளவு அதிகரித்து, இதய நோய் பாதிப்பை அதிகரிக்கச் செய்கிறது.

முட்டையில் அதிகப்படியான டயட்ரி கொழுப்பு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு முட்டையில் 185 மி.கி அளவிற்கு இருக்கிறது. ஆனால் உண்மையில் கொழுப்பின் அளவை அதிகரிப்பது, உணவில் இருக்கும் நிறைவுற்ற கொழுப்பே(saturated fat) ஆகும். உணவில் இருக்கும் சாதாரண கொழுப்பால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

இதய ஆரோக்கியத்திற்கும், ஒரு நாளுக்கு ஒரு முட்டை உண்பதற்கும் இடையேயான தொடர்பை, ஆராய்ச்சிகளும், படிப்பினைகளும் கண்டறிய தவறிவிட்டன. இதில் மரபியல் ரீதியாக இதய பிரச்சினைகள் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளவர்களும் விதிவிலக்கல்லர்.

முட்டை கட்டாயம் சாப்பிட வேண்டும் என்பதற்கான காரணங்கள் நீண்ட பட்டியலாக இருக்கிறது. முட்டையில் விட்டமின் ஈ, போலேட், செலினியம், லுடெய்ன், புரதம், கனிமங்கள் மினரல்கள் இருக்கின்றன. இந்த ஊட்டச்சத்துகள் அனைத்தும் மூளை ஆரோக்கியம், பார்வை, நோய் எதிர்ப்பு ஆகியவற்றிற்கு பெரிதும் உதவுகின்றன.

உடல் எடையை குறைக்க திட்டமிட்டுள்ளவர்களுக்கு, முட்டை மிகச்சிறந்த காலை உணவாகும். முட்டையில் நிறைந்துள்ள புரதம், நீண்ட நேரத்திற்கு வயிறு நிரம்பிய உணர்வை அளிக்கிறது. கார்போஹைட்ரேட் நிறைந்த காலை உணவை உட்கொண்டால், விரைவில் பசியெடுக்கும் சூழல் உண்டாகும். அதிக நார்ச்சத்து, அதிக கார்போஹைட்ரேட் கொண்ட உணவுடன் முட்டை சேர்த்துக் கொள்ளலாம். இதுவே ஆரோக்கிய மற்றும் அதிகப்படியான காலை உணவாக அமைகிறது.

வேக வைத்த முட்டைகள் மிக ஆரோக்கிய உணவாகும். இதனுடன் வேறு எதையும் சேர்த்து உண்ண வேண்டிய அவசியமில்லை. முட்டைகள் பிடிக்கவில்லை எனில், ஆரோக்கியமான எண்ணெயை இட்டு, முட்டையை சமைத்து பொரித்து உண்ணலாம்.

# திருமண வாழ்வில் ஏற்படும் பிரச்சினையும் அதற்கான தீர்வும்



உங்களின் துணை உங்களிடம் சின்ன விடயத்துக்கெல்லாம் கோபித்துக்கொள்கிறார் என்றால், அது உங்கள்மீதான கோபமல்ல. நிதானமாக இருந்து அந்தச் சூழ்நிலையை சகஜநிலைக்கு மாற்றுங்கள்.

தற்போது பெண்களும் அலுவலகம் செல்கின்றனர். எனவே, வீட்டுவேலைகளை சமமாகப் பிரித்து செய்வது அவசியம். பொதுவாக ஆண்கள், வீட்டுவேலைகள் செய்யத் தெரியாமலோ அல்லது செய்யப் பிடிக்காமலோ இல்லை. வீட்டு வேலைகள் செய்வதிலிருக்கும் கடுமையைப் புரிந்துகொள்ளாமல் இருப்பதுதான் மிக முக்கி யமான காரணம். ஒருமுறை தன் மனைவியோடு நின்று அனைத்து வேலைகளையும் சமமாகப் பங்கிட்டு செய்தால் மட்டுமே, இந்தப் பிரச்சினை தீரும். அன்பை அளவில்லாமல் பரிமாறிக் கொள்வதுபோல், வீட்டுச்சுமையையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளுங்கள்!

உங்கள் அவரின் சிரிப்பு, அழுகை, கோபம் போன்ற வெளிப்பாடுகளை விட, உங்கள் போனில் வரும் போலியான வெளிப்பாடு



களை சரி பார்க்கத்தான் நேரம் சரியாக இருக்கிறது. குறைந்தபட்சம், வார இறுதிநாளில் தொலைபேசி மற்றும் சமூக வலைதளங்களுக்கு விடுதலை கொடுத்து, உங்கள் அவரோடு நேரத்தை முழுமையாகச் செலவிடுங்கள். மனம்விட்டு பேசும்போது எந்தக் கவனச்சிதறலும் இல்லாமல் இருப்பது சிறந்தது.

வங்கிக்கணக்கில் பணம் இருந்தாலும் சரி... இல்லை என்றாலும் சரி, பண விடயத்தில் கணவன் – மனைவிக்கிடையே சண்டைவருவது இயல்பு. கணவன் – மனைவியாய் இருந்தாலும், ஒவ்வொருவருடைய தேவை என்பது வேறு. எண்கள் நிறைந்த தாள் என்பதையும் தாண்டி அது உணர்வுகளின் வெளிப் பாடு. ‘ஆசை’ இருக்கும் வரையில் ‘காசு’ வாழும். எது அத்தியாவசியம், எது வீண் செலவு என் பதை கணவன் – மனைவி இருவரும் ஆலோசித்து முடிவெடுப்பது அவசியம். தேவைக்கு மீறி செலவு செய்வதில் இருக்கும் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து, பிறகு அடி எடுத்து வைப்பது நல்லது. உங்கள் அன்பை முறிக்கும் எந்த விஷயத்தையும் இருவருக்கு மிடையில் அனுமதிக்காதீர்கள்.

சந்தோஷமான வாழ்க்கைக்காக சிறிது நேரம் உங்கள் துணைக்குச் செலவிடுங்கள். அன்பை விட வேறென்ன பெரிதாக இருக்கப் போகிறது.



# ஆப்பு அசைத்து இறந்த குரங்கின் கதை

ஒரு விறகு வெட்டி இருந்தான். காட்டுப் பகுதிக்கு ஒட்டி இருந்தது அவன் குடிசை. மரங்களை வெட்டி வருவது, கோடரியால் பிளப்பது, சிறு துண்டுகளாக்கி பக்கத்துக்கு கிராமங்களுக்கு கொண்டு விற்பது. அதை கொண்டு குடும்பம் நடத்துவது, அவனது அன்றாட வேலை.

அன்று அப்படிதான் ஒரு பெரிய அடிமரத்துண்டை கோடரியால் பிளக்க ஆரம்பித்தான். கலப்பு வந்தது. அடிமரத்தை பாதியளவு பிளந்திருந்ததால் அப்பிளவுக்கு இடையில் ஆப்பு போல் ஒரு மரச்சக்கையை வைத்துவிட்டு ஓய்வெடுக்கச் சென்றான்.

பக்கத்திலேயே ஒரு பெரிய மரம் இருந்தது. அம்மரத்தின் ஒரு கிளையில் இருந்த அக்குரங்கு ஒன்று மரம் வேட்டியின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தது. மரம் வெட்டி அப்பால் நகர்ந்ததும் அக்குரங்கு உடனே இறங்கி வந்தது. அம்மரத்துண்டின் பிளவுபட்ட பகுதியில் வால் முழுவதும் விட்ட நிலையில் அதன்மேல் அமர்ந்து கொண்டது.

அது குரங்கு அல்லவா! அதற்கே உரிய குரங்கு வேலையைச் செய்ய ஆரம்பித்தது; ஆப்பாக சொருகி இருந்த மரத்துண்டை ஆட்டி ஆட்டி எடுக்க ஆரம்பித்தது. ஒரு ஆட்டு, இரண்டு ஆட்டு, மூன்று ஆட்டு... சில ஆட்டுகள்! படுக்கென்று அந்த ஆப்புதுண்டு வந்துவிட்டது. சடக்கென்று பிளவுபட்டப் பகுதியின் இடைவெளி குறைந்துவிட்டது. அத்துடனா? பிளவுக்குள் தொங்கி இருந்த வால் நசுங்க குறைந்து வீல் வீல் என்று அலறியது.


ஓய்வாக உள்ளே இருந்த மரம்வெட்டி அலறல் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். குரங்கு பாவம் செத்துவிட்டது. இத்தனை நாள் இல்லாமல் எங்கிருந்து வந்துத் தொலைந்தது இன்று சாவதற்கென்றே என்ற முணுமுணுப்புடன் குரங்கின் உடலை அப்புறப் படுத்தினான் அவன்.

குரங்கின் அசட்டுச் செயல் அதற்கே அழிவை தந்துவிட்டது.

# விடுகதைகளும் விடைகளும்

1. நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ள துணியில்லை அது என்ன?
   சிலந்திவலை
2. நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்?
   மணிக்கூடு
3. காலையிலும் மாலையிலும் நெட்டை மதியம் குட்டை நான் யார்?
   நிழல் அல்லது விம்பம்
4. பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார்?
   சீப்பு
5. வெள்ளை மாளிகை உள்ளே செல்ல வாசல் இல்லை அது என்ன?
   முட்டை
6. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?
   உள்ளங்கையும் விரல்களும்
7. தொப்பொன்று விழுந்தான் தொப்பி கழன்றான் அவன் யார்?
   பனம்பழம்
8. சட்டையைக் கழற்றினால் சத்துணவு அது என்ன?
   வாழைப்பழம்
9. பட்டுப்பை நிறைய பவுண் காசு அது என்ன?
   செத்தல் மிளகாய்

# புவியீர்ப்பு விசையை தாண்டி நிற்கும் சிற்பம்



# தேர்தலை நடத்த அரசுக்கு ஆர்வம் இல்லை: பவ்ரல்!

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு அரசியல் ரீதியான ஈடுபாடு – ஆர்வம் – இல்லை என பவ்ரல் அமைப்பு தெரிவித் துள்ளது.

தற்போதைய அர சின் எந்தவொரு அர சியல் கட்சியும் தேர்தலை நடத்துவதற்கு பொது தீர்மானத்தை எடுக்கவில்லை என வும் பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் உத்தியோகபூர்வ காலம் கடந்த வருடம் செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் முடிவடைந்துவிட்டது என தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் தற்போது இந்த மாகாணங்கள் ஆளுநரின் கட்டுப்பாட்டிற்கு கீழ் இருப்பதுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி மத்திய மாகாணத்தி னதும், 10 ஆம் திகதி வடமேல் மாகாணத்தி னதும், 24 ஆம் திகதி வட மாகாணத் தினதும் உத்தியோகபூர்வ காலம் முடிவடைய உள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆகும் போது அனைத்து மாகாண சபைகளிலும் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்தி ருப்பினும் இதுவரையில் அது தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலும் மேற்கொள் ளப்படவில்லை என பவ்ரல் தெரிவிக்கின் றது.

இம்முறை வாக்காளர் பட்டியலில் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி கையொப்ப மிட ஏற்பாடாகியுள்ளது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம் மொஹமட் தெரிவித்துள்ளார்.

இம்முறை வாக்காளர் பட்டியலின் திருத் தங்கள் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரையில் நடைபெற உள்ளன என தெரிவிக் கப்படுகின்றது.

அதன் பின்னர் திருத்தங்கள் தொடர் பான விசாரணை நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

## ஜப்பான் நகர அபிவிருத்தி திட்டமிடல் முறைமையின் கண்டி நகரம் அபிவிருத்தி!

கொழும்பு, ஓக.14

ஜப்பானின் நகர அபி விருத்தி திட்டமிடல் முறை மையின் கீழ், கண்டி நக ரத்தை அபிவிருத்தி செய் வது தொடர்பில் அவதா னம் செலுத்தப்பட்டுள் ளது.

கண்டி நகர அபிவி ருத்தி அதிகார சபையி னால், ஜப்பான் சர்வதேச கூட்டுறவுடன் இணைந்து இதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள் ளது.

## பிரதான வீதியில் மண்சரிவு: போக்குவரத்து பாதிப்பு!



ஹட்டன் – சலன்கந்த பிரதான வீதியில் ஏற் பட்டுள்ள மண்சரிவு காரணமாக நேற்று அதிகாலை முதல் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த வீதியூடாக செல்லும் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிரதான பாதையிலுள்ள மண்ணை அகற்ற நோர்வூட் பிரதேச சபையூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பிரதேசபை உறுப்பினர் மு.இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக மேலும் சில பகுதி களில்

மண்சரிவு ஏற்பட்டுள்ள து என ஹட்டன் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

## கம்பெரலிய கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வீடுகளில் மீன் வளர்க்கும் திட்டம்!

கொழும்பு, ஓக.14

வீடுகளில் மீன் வளர்க் கும் திட்டத்தை அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள் ளது. கம்பெரலிய கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இந்த மீன்வளர்ப் புத் திட்டம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது என கடற்தொழில் மற்றும் நீரி யல் வளத்துறை பிரதி அமைச்சர் திலிப் வெத ஆரச்சி தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் சாதக பாதக தன்மை குறித்து ஆய்வு



செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள து என பிரதி அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

கிராமப்புற மக்களை மீன்வளர்ப்புத் துறையில் ஊக்கப்படுத்தும் வகை யில் இந்த வேலைத்திட் டம் முன்னெடுக்கப்படுகின் றது.

## பொன்னம்பலவானேஸ்வரர் ஆலய பால்குட பவனி!

கொழும்பு, ஓக.14

கொழும்பு – கொச்சிக்கடை ஸ்ரீ பொன் னம்பலவானேஸ்வரர் ஆலயத்திலிருந்து நேற்று காலை பால்குடபவனி இடம்பெற்றது.

இந்த பால்குட பவனியில் கலந்து கொள்வ தற்காக பெருந்திரளான மக்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர்.

இந்த பவனி இறுதியில் கதிரேசன் வீதியில் அமைந்துள்ள கருமாரியம்மன் ஆலயத்தைச் சென்றடைந்தது.

வருடந்தோறும் இடம்பெறும் இந்த பால் குட பவனியில் தமது வேண்டுதல்களை இறை வனிடம் கொண்டு சேர்க்கும் வகையில் சிறியவர் கள் முதல் பெரியவர்கள் வரை கலந்து கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பழ மரச் செய்கையாளர்களுக்கு பராமரிப்பு உபகரணங்கள் வழங்கல்!

ஜனாதிபதியின் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் விவசாயத்துறையின் மேம்பாடு கருதி இயற்கை முறை விவசாயத்தை ஊக்குவிக்கும் முக மாக பழச் செய்கையாளர்களுக் காக உபகரணங்கள் மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமா ரால் வழங்கப்பட்டன.

மட்டு. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் இருந்து தெரிவு செய் யப்பட்ட 12 பழ மரச் செய்கையாளர் களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட விவசாய அலுவலகத் தால் வழங்கப்பட்ட இந்த உபகரணங் களில் பயிர்களைப் கத்தரிக்கும் உபகரணங்கள், பழைய மரங்க



ளைப் பராமரிக்கக்கூடிய உபகர ணங்கள், மேலங்கிகள், உயர்த்தி கள், பொலித்தீன் பைகள், நைலோன் கயிறுகள் உள்ளிட்ட உபகரணங் கள் அடங்குகின்றன.

மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந், மாவட்ட விவசா யப் பணிப்பாளர் யாசிம் பாவா

இக்பால், விவசாயப் பிரிவு அலுவலக உத்தியோகத் தர்கள் எனப் பலரும் இந் நிகழ்வில் கலந்துகொண் டுள்ளனர்.

மா, தோடை, வாழை, பலா, கொய்யா, மாதுளை உள்ளிட்ட பழப் பயிர்ச் செய் கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மட்டக்க ளப்பு மாவட்டத்தில் இயற்கை முறையிலான விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோச னையின் கீழ் ஊக்குவிக்கும் செயற் பாடுகளில் மாவட்ட விவசாயப்பிரிவு ஈடுபட்டு வருகிறது என்பது குறிப் பிடத்தக்கது.

## நாம் பயிரிட்டு நாம் உண்போம் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டம்!



நாம் பயிரிட்டு நாம் உண்போம் எனும் விவ சாய அபிவிருத்தி திட்டத் தின் கீழ் மற்றுமொரு வேலைத்திட்டம் அங்கு னுபொல – பலஸவில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹைலெ வல் போட்டாவ குளம் மீள மைக்கப்படுவதுடன் அதனை அண்டியுள்ள கிராமும் விருத்தி செய்யப் படவுள்ளது.

விவசாய உற்பத்தி பொருட்களின் ஏற்றும தியை அதிகரித்து இறக்கு மதிகளை குறைப்பதே இந்த திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சோளம், அன்னாசி மற்றும் பச்சைமிளகாய் போன்ற ஏற்றுமதி பயிர்ச் செய்கைகளில் இளை ஞர்களை கூடுதலாக ஈடு படுத்துவதன் மூலம் இந்த இலக்கை எட்ட முடியும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## புலமைப் பரீட்சை விடைத்தாள் திருத்தம் நாளை முதல்!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகள் நாளை 15 ஆம் திகதி ஆரம்பிக் கப்படவுள்ளது.

21 ஆம் திகதியுடன் இந்தப் பணிகள் நிறைவடைய வுள்ளன.

இந்தப் பணிகளில் 8 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

## ஹஜ் யாத்திரிகர்களின் நலன்களை விசாரித்த முஸ்லிம் கலாசார திணைக்கள அதிகாரிகள்

புனித ஹஜ் கடமை களை நிறைவேற்றுவதற் காக மக்கா நகர் சென்றுள்ள இலங்கை ஹஜ் யாத்தி ரிகர்களின் நலன்களை விசாரிக்கும் நோக்கில் இலங்கை முஸ்லிம் சமய மற்றும் கலாசார திணைக் கள உயர் அதிகாரிகள் அங்கு விஜயம் செய்துள் ளனர்.

முஸ்லிம் சமய பண் பாட்டலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் எம்.ஆர்.எம். மலிக் தலைமையிலான இந்த அதிகாரிகள் குழுவி னர் இலங்கை ஹஜ் யாத்தி ரிகர்கள் தங்கியுள்ள விடுதி களுக்கு வியஜம் செய்து அவர்களுக்கு வழங்கப்பட் டுள்ள வசதிகள் குறித்து ஆராய்ந்ததுடன் ஹஜ் யாத்திரிகர்களுடன் சிநே கபூர்வ கலந்துரையாடல் களிலும் ஈடுபட்டனர்.

அகில இலங்கை ஜம் மியத்துல் உலமாவின் உத விப் பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம். தாஸீம், இலங்கை கல்வி அமைச்சின் முஸ் லிம் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் ரீ. தாஜுடீன், பாணந்துறை வைத்திய சாலை வைத்திய அதிகாரி எம்.ஆர்.எம். நியாஸ் உள் ளிட்ட இலங்கை முஸ்லிம் சமய மற்றும் கலாசார திணைக்கள அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

## ஆயிரமாவது மாதிரி எழுச்சிக் கிராமத்தின் நிர்மாணப் பணி ஆரம்பம்!



'அனைவருக்கும் நிழல்' மீள் எழுச்சி கிரா மம் வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஆயிரமாவது மாதிரிக் கிராமத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை – சூரியவெவ – வெதி வெவ பிரதேசத்தில் அமைக்கப்படும் 'சஹஸ்ரா கம' எழுச்சிக் கிராமத்தில் 25 வீடுகள் அமைக் கப்படுகின்றன.

தற்போதைய அர சின் கீழ், 3 வருடங்களுக் குள் ஆயிரம் எழுச்சிக் கிராமங்களை அமைக்க முடிந்திருக்கிறது என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரே மதாச தெரிவித்தார்.

# சவூதி கூட்டுப்படைகள் தாக்குதல்; கிளர்ச்சியாளர் 46 பேர் உயிரிழப்பு!

ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து, சவூதி அரேபிய கூட்டுப்படைகள் நடத்திய வான் தாக்குதல்களில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 46 பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

ஏமன் நாட்டில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி மன்சூர் ஹாதி படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே சண்டை நடந்து வருகிறது.



இதில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை ஈரான் ஆதரிக்கிறது. அதே நேரத்தில் ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கு ஆதரவாக சவூதி கூட்டுப்படைகள் களம் இறங்கி தாக்குதல் நடத்தி வருகின்றன.

இது ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு சவூதி அரேபியா மீது தீராப்பகையை உண்டாக்கி உள்ளது. இதனால் சமீப காலமாக சவூதி அரேபிய நகரங்களைகுறிவைத்துஹவுதிகிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து, சவூதி அரேபிய கூட்டுப்படைகள் நடத்தியவான்தாக்குதல்களில்ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 46 பேர் கொன்றுகுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல்கள் துஹாயத், ஜபித், எல் உசேனியா மாவட்ட பகுதிகளில் நடந்துள்ளன.

மேலும் சவூதி கூட்டுப்படைகளின் உதவியுடன் ஹவுதி கிளர்ச்சியாளர்களிடம் இருந்து அல் தஹார் மாவட்டத்தில் சில பகுதிகளை ஏமன் படைகள் மீட்டுள்ளன என தகவல்கள் கூறுகின்றன.

## இந்தியாவில் இருந்து பஞ்சாபைப் பிரிக்கக் கோரி சீக்கிய பிரிவினைவாதிகள் லண்டனில் போராட்டம்!







பஞ்சாப்பை தனி நாடாக்க கோரும் காலிஸ்தான் பிரிவினைவாதிகள் இது தொடர்பாக வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தி லண்டன் நகரில் நேற்று முன் தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பஞ்சாப் தனி நாடாக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிரிட்டன் நாட்டில் உள்ள பல சீக்கிய அமைப்புகள் நேற்று முன்தினம் லண்டனில் பெரும் பேரணி நடத்தின. 'சீக்ஸ் ஃபார் ஜஸ்டிஸ்' (Sikhs For Justice) என்ற சீக்கிய அமைப்புகளின் கூட்டணி சார்பில் லண்டன் நகரில் உள்ள டிராஃபால்கர் சதுக்கத்தில் இந்தப் பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியில் பஞ்சாப் தனி நாடாக உருவாவது குறித்து எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் பொது வாக் கெடுப்பு நடத்தக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பேரணி குறித்து 'சீக்ஸ் ஃபார் ஜஸ்டிஸ்' அமைப்பின் சட்ட ஆலோசகரான குர்பத்வந்த் சிங் பனுன் செய்தியாளர்களிடம் பேசுகையில் –

"சுதந்திர பஞ்சாப் 2020ம் ஆண்டு வாக்கெடுப்புக்கான லண்டன் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

வரலாற்றில் முன்பு இருந்தது போல் பஞ்சாப் மீண்டும் தனி நாடாக உருவாக்கப்படும் என்பதை உலக நாடுகளுக்கு அறிவிக்க அந்த தீர்மானம் ஐ.நா. சபையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த, பேரணியில் உலகம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கலந்து கொண்டனர். மேலும், இந்தப் பேரணி குறித்து இந்திய அரசு கவலை தெரிவித்துள்ளது. இந்தியாவின் ஒற்றுமையை சீர்குலைக்க பிரிவினைவாதிகளின் சதி வேலை இது என இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## இந்தோனேஷியாவில் விமான விபத்து: 8 பேர் பலி; சிறுவன் உயிருடன் மீட்பு!

இந்தோனேஷியாவில் விமானம்விழுந்து நொருங்கியதால் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 12 வயது சிறுவன் மட்டும்அதிஷ்டவசமாகஉயிர் தப்பியுள்ளார் .

பபுவா மாகாணம் தனாவில் இருந்து கடந்த சனிக்கிழமை மாலை ஒக்சில் பகுதிக்கு சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. விமானத்தில் 12 வயது சிறுவன் உட்பட 9 பேர் இருந்தனர். இந்த விமானம் ஒக்சில் விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்குமுன்பாககட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து மாயமானது.

இதனால் அதிர்ச்சியடைந்த விமான நிலைய அதிகாரிகள், காணாமற் போன அந்த விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில்விமானம்பெகுனுங்கன் பிண்டாங் மாவட்டத்தின் மலைப்பகுதியில் விழுந்துநொருங்கிகிடப்பதாக தெரியவந்தது. இதனையடுத்து மீட்புக்குழுவினர் மற்றும்உயர்அதிகாரிகள்அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 8 பேர் உயிரிழந்துவிட்டனர் என தெரிவிக்கப்பட்டது, 12 வயது சிறுவன் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். இந்தவிபத்துக்கானகாரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




## சிரியா ஆயுத கிடங்கில் வெடி விபத்து: 39 பேர் பலி!

டமாஸ்கஸ், ஓக.13

சிரியா நாட்டின் இட்லிப் மாகாணத்தில் உள்ள ஆயுத கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தில் குழந்தைகள் உட்பட 39 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள இட்லிப் மாகாணத்தில் அரசுப்படைகளுக்கும் போராளிகுழுக்களுக்கும் இடையே நடந்துவரும் உள்நாட்டுப் போரால் அங்கு வாழும் சுமார் 25 லட்சம் மக்களில் சரிபாதி பேர் தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேறி விட்டனர்.



இந்த மாகாணத்தின் பல பகுதிகள் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்நிலையில், இட்லிப் மாகாணத்தில் துருக்கி நாட்டின் எல்லையோரம் அமைந்துள்ள சர்மாடா நகரில் உள்ள அரசு ஆயுத கிடங்கில் நேற்று முன்தினம் பயங்கரமான வெடி விபத்து ஏற்பட்டது.

அதிர்ச்சியில் அருகில் உள்ள இரு வீடுகள் இடிந்து தரை மட்டமாகின. இடிபாடுகளில் சிக்கிய மக்களை புல்டோசர் வாகனங்களின் உதவியுடன் ராணுவத்தினர் மீட்டனர். எனினும், 39 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் சுமார் 50 பேரில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அங்குள்ள போர் நிலைவரங்களை பார்வையிடும் மனித உரிமை கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இது விபத்தா? அல்லது வன்முறைதாக்குதலா? என்பது தொடர்பான முதல்கட்ட தகவல் ஏதும் வெளியாகவில்லை.

## இஸ்ரேலில் இன பாகுபாட்டை அதிகரிக்கும் புதிய சட்டம்; அரசுக்கு எதிராக பல்லாயிரக்கணக்கானோர் போராட்டம்!



ஜெருசலேம், ஓக.14

இஸ்ரேல் நாட்டில் யூதர்களுக்கு மட்டுமே அதிக முன்னிரிமை அளித்து உருவாக்கப்பட்டுள்ள புதிய சட்டத்தை எதிர்த்து பல்லாயிரக் கணக்கானோர் பேர ணியில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேலின் பூர்வீக குடிகளாக கருதப்படும் ஜெவிஸ் சமூகத்தினருக்கு மட்டுமே அந்நாட்டின் சுய உரிமை அளிக்கப்படுகிறது என புதிதாக சட்டம் இயற்றப்பட்டது. மேலும், இந்த சட்டத்தின் மூலம் அரபி மொழி அரச அலுவல் மொழிகளின் பட்டியலில் இருந்து நீக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் வாழும் அரேபியர்கள் பல்லாயிரக்கணக்கானோர் இந்தச் சட்டத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இங்கு வாழும் அரேபியர்கள் பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது. 1948 ஆம் ஆண்டுநடைபெற்றபோருக்கு பிறகு இவர்கள் இங்கு குடியேறினர் எனத் தெரிகிறது.

இஸ்ரேல் அரசின் இந்த சட்டத்தை எதிர்த்து ட்ரஸ் எனப்படும் இஸ்ரேலில் வாழும் பழங்கால அரபியர்கள் கடந்த வாரம் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினர். இந்த போராட்டத்தில் சுமார் 1லட்சத்து 20ஆயிரம்பேர்பங்கேற்றனர்.

இந்தசட்டம்குறித்துபேசிய அந்நாட்டின் பிரதமர் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு –


இந்த சட்டத்தின் மூலமே ஜெவிஸ் மக்களின் சுய உரிமைகள் பாலஸ்தீன அரேபியர்களால் தடுக்கப்படுவதை தவிர்க்க முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இந்த சட்டத்தை திரும்பப்பெறக்கோரி பல்லாயிரக்கணக்கானோர் டெல் அவிவ்வில் மாபெரும் கண்டனப் பேரணியில் ஈடுபட்டனர். அப்போது இந்த சட்டம், இனவாதத்தை சட்டபூர்வமாக்குகிறது என அவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



# சிறுமிகளை பலாத்காரம் செய்வோருக்கு மரண தண்டனை விதிக்கும் புதிய சட்டத்துக்கு இந்திய ஜனாதிபதி ஒப்புதல்!



12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை பலாத்காரம் செய்வோருக்கு மரண தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்தார்.

காஷ்மீரின் கதுவாவில் சிறுமி ஒருவர் பலாத்காரம் செய் து கொலை செய்யப்பட்ட சம்பவமும், உத்தரபிரதேசத்தின் உன்னாவ் நகரில் 17 வயது சிறுமி ஒருவர் எம்.எல்.ஏ. உள்ளிட்டோரால் பலாத்காரம் செய் யப்பட்ட சம்பவமும் கடந்த சில மாதங்களுக்கு முன் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அதைத்தொடர்ந்து சிறுமிகளை பலாத்காரம் செய்வோருக்கு மரண தண்டனை விதிக்கும் வகையில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி மத்திய அரசு அவசர சட்டம் பிறப்பித்தது. பின்னர் இந்த அவசர சட்டத்துக்கு பதிலாக புதிய சட்ட திருத்த பிரேரணையை சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் மத்திய அரசு தாக்கல் செய்தது.

குற்றவியல் சட்டம் (திருத்தம்) பிரேரணை 2018 என்ற இந்த பிரேரணை நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறியது.

இதைத்தொடர்ந்து ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட இந்த பிரேரணைக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கினார். இதன் மூலம் இந்த சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

குற்றவியல் (சட்ட திருத்தம்) சட்டம் என அழைக்கப்படும் இந்த சட்டம், கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி முதலே அமலுக்கு வந்ததாக கருதப்படும் என மத்திய அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டு உள்ளது.

இதன் மூலம் இந்திய தண்டனை சட்டம், இந்திய சாட்சிகள் சட்டம் 1872, குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 மற்றும் போக்சோ சட்டம் 2012 ஆகியவற்றில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இந்த புதிய சட்டம், பலாத்காரத்தில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்க வழிவகுக்கிறது. குறிப்பாக 12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்வோருக்கு மரண தண்டனை வழங்கப்படும். இதில் குறைந்தபட்ச தண்டனையாக 20 ஆண்டு அல்லது வாழ்நாள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

இந்தச் சிறுமிகளை கூட்டு பலாத்காரத்தில் ஈடுபடுவோருக்கு வாழ்நாள் சிறை அல்லது மரண தண்டனையும் விதிக்க வகை செய்கிறது.

16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை கற்பழிப்போருக்கான குறைந்தபட்ச சிறைத்தண்டனை 10 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டாக அதிகரிக்கப்படுகிறது. இது வாழ்நாள் சிறையாக அதிகரிக்கவும் வழி வகுக்கிறது. இந்த சிறுமிகளை கூட்டு பலாத்காரம் செய்வோருக்கு வாழ்நாள் சிறை விதிக்கப்படும்.

இந்த பலாத்கார வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்கவும் இந்த சட்டம் வழிவகுப்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னைக்கு திரும்பினார் விஜய்; கருணாநிதி சமாதியில் அஞ்சலி!



அமெரிக்காவில் சர்கார் படப்பிடிப்பை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய நடிகர் விஜய், மெரினாவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் சமாதியில் அஞ்சலி செலுத்தினார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி கடந்த 7 ஆம் திகதி உடல்நலக்குறைவால் காலமானார். அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் மற்றும் பொதுமக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு பிறகு, அவரது உடல் சென்னை மெரினா கடற்கரையில் அண்ணா சமாதிக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்று முதல் இன்று வரை பொதுமக்கள் பலரும் கருணாநிதி சமாதிக்கு நேரில் வந்து மரியாதை செலுத்தி வருகின்றனர். அதேபோல் அரசியல் தலைவர்கள் மற்றும் சினிமா பிரபலங்களும் கருணாநிதி சமாதிக்கு வந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவில் சர்கார் படப்பிடிப்பை முடித்துக் கொண்டு நேற்று அதிகாலை சென்னை திரும்பிய நடிகர் விஜய், நேராக மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதி சமாதிக்குச் சென்று மரியாதை செலுத்தினார்.

## பாகிஸ்தான் சிறையில் இருந்து 26 இந்திய மீனவர் விடுதலை



இந்திய எல்லை தாண்டி பாகிஸ்தான் நாட்டு எல்லைக்குள் சென்று பிடிபட்டு சிறையில் இருந்த 26 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் அரசு விடுதலை செய்து உத்தரவிட்டது.

இந்திய எல்லையை தாண்டி பாகிஸ் தான் எல்லைக்குள் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் பலரை பாகிஸ்தான் கடற்படையினர் சிறை பிடித்துச் சென்று கராச்சி சிறையில் அடைத்து வைத்துள்ளனர்.

இந்நிலையில், இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வகையில் பாகிஸ்தான் சிறையில் இருக்கும் 26 இந்திய மீனவர்களை அந்நாட்டு அரசு விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது.

விடுவிக்கப்படும் மீனவர்கள் நாடு திரும்புவதற்கான பயண செலவை எதி பவுண்டேன் என்ற தொண்டு நிறுவனம் ஏற்றுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் அதிகாரி கூறுகையில்,

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக நல்லெண்ண அடிப்படையில் 26 மீனவர்களை விடுதலை செய்துள்ளனர். மேலும், அங்குள்ள சிறைகளில் இருக்கும் மீதமுள்ள மீனவர்களை விடுவிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# கலைஞர் விசுவாசிகள் என் பக்கம்: அழகிரி !



மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் விசுவாசமான உடன்பிறப்புகள் தன் பக்கம் இரு கின்றனர் என மு.க. அழகிரி தெரிவித்துள்ளார்.

மெரினா கடற்கரையில் கருணாநிதி நினைவிடத்தில் அவரது மகனும், முன்னாள் மத்திய அமைச்சருமான மு.க.அழகிரி நேற்று முற்பகல் 11 மணியளவில் வந்து அஞ்சலி செலுத்தினார்.

அவருடன் மனைவி காந்தி, மகன் துரை தயாநிதி, மகள் கயல்விழி ஆகியோரும் அஞ்சலி செலுத்தினார்கள்.

மு.க.அழகிரி மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன் மலர்வளையம் வைத்தும் வணங்கினார். பின்னர் சமாதியை சுற்றி வந்து வணங்கினார்.

அதன்பிறகு மு.க.அழகிரி நிருபர்களை சந்தித்தார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு–

நான் என் அப்பாவிடம் வந்து எனது ஆதங்கத்தை வேண்டிக் கொண்டிருக்கிறேன். அது என்ன ஆதங்கம் என்பது இப்போது தெரியாது. தலைவர் கலைஞருடைய உண்மையான விசுவாசம் உள்ள உடன்பிறப்புக்கள் எல்லோரும் என் பக்கம்தான் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அத்தனை விசுவாசிகளும் என்னுடன் இருக்கிறார்கள். என்னை ஆதரித்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு காலம் பின்னால் பதில் சொல்லும்.

கே:– உங்களது ஆதங்கம் கட்சி தொடர்பானதா? அல்லது குடும்பம் தொடர்பானதா?

ப: – கட்சி தொடர்பானது தான்.

கே: – நாளை நடைபெற உள்ள தி.மு.க. தலைமை செயற்குழு பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: – அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. செயற்குழு பற்றி என்னிடம் கேட்காதீர்கள். நான் இப்போது தி.மு.க.வில் இல்லை. அதனால் செயற்குழு பற்றி கேட்காதீர்கள்.

கே:– மீண்டும் நீங்கள் தி.மு.க.வில் இணைவதற்கு வாய்ப்பு உள்ளதா?

ப:– அதுபற்றி எனக்கு தெரியாது. எனது ஆதங்கத்தை கலைஞரிடம் சொல்லி இருக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார். பேட்டி முடிந்த போது, 'அஞ்சா நெஞ் சன் அழகிரி' என்று தொண்டர்கள் கோஷமிட்டனர்.

அழகிரி அஞ்சலி செலுத்த வருவதை அறிந்து மதுரையில் இருந்து ஏராளமான அவரது ஆதரவாளர்கள் நினைவிடத்திற்கு வந்திருந்தனர்.

அஞ்சலி செலுத்திய பிறகு அழகிரி நேராக கோபாலபுரத்தில் உள்ள கருணாநிதியின் வீட்டுக்குச் சென்றார்.

அங்கு அப்போது மு.க.ஸ்டாலின் இருந்தமையால் சிறிது நேரத்தில் அழகிரி அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார்.

## தி.மு.க தலைவர் கருணாநிதி மறைவுக்கு அமைதி பேரணி நடத்திய தொண்டர்கள்!




சென்னை, ஓக.14

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மறைவுக்கு சென்னை அண்ணாநகர் தொகுதி தி.மு.க. தொண்டர்கள் அமைதி பேரணி நடத்தி தங்களது சோகத்தை வெளிப்படுத்தினர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல்நலக்குறைவு காரணமாக கடந்த 7 ஆம் திகதி சென்னை காவேரி மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் கருணாநிதி மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் தொகுதி தி.மு.க. சார்பில் நேற்று அமைதி பேரணி நடத்தப்பட்டது. இதேபோல் பல்வேறு பகுதிகளில் தொண்டர்கள் அமைதிப் பேரணி நடத்தி வருகின்றனர்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே மாநகர முதல்வர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் –

குருநகர் மட்டுமல்லாமல் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் உள்ள சகல கிராமங்களிலும் சட்டத்திற்கு மாறாக கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால் அவை தொடர்பாக அந்தந்த கிராமங்களில் வாழும் நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுவதில்லை.

காரணம் அவர்களுடைய வாக்கு வங்கி பாதிக்கப்படும் என நினைக்கிறார்கள். இந்நிலையில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட 23 கட்டடங்கள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். மேலும் சட்ட விரோதமாக மக்கள் மட்டும் வீடுகளையும், கடைகளையும் கட்டவில்லை.

யாழ்.மாநகரில் உள்ள பாரிய வர்த்தக நிலைய கட்டடங்கள் பல சட்டத்திற்கு மாறாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக எந்த அனுமதியும் பெறப்படவில்லை. இங்கே யாரும் நடிக்க தேவையில்லை. மேலும் கரையோரங்களில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்கள் நிச்சயமாக அகற்றப்படும்.

அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. அதற்கு முன்னர் அந்த கட்டடங்களில் உள்ள மக்களுக்கான மாற்றுத் திட்டம் ஒன்றை நாம் உருவாக்க வேண்டியது கட்டாயமாகும். அந்த மாற்று திட்டம் வந்தவுடன் கட்டடங்கள் அகற்றப்படும்.

இந்த கரையோரத்தில் உள்ள கட்டடங்களுக்கு யாழ்.மாநகர சபை சோலைவரியில் கூட சட்டத்திற்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன – என்றார். (ஐ-7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எரிந்து நாசமாகி உள்ளன.

சம்பவஇடத்துக்குவடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், பிரதேச சபை உறுப்பினர் மற்றும் பொலிஸார் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இராணுவம் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை அணைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ)



## யாழ். சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தலைமையில் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

அதன் பிரகாரம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள சிறைச்சாலை வளாகம் அனுமதி இன்றி அமைக்கப்பட்டது. அதற்கு யாரால் அனுமதி வழங்கப்பட்டது என்பது தெரியாத நிலையில், அங்கு தற்போது மேலதிக கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிறைச்சாலை இராஜ வீதிக்கு மாறவேண்டும், அங்கு தான் அதற்கான காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே மேலதிக எந்தக் கட்டட நடவடிக்கைகளும் மேற்கொள்ளக் கூடாது என மாகாண சபை உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள் உட்பட பலர் எதிர்ப்பு வெளியிட்டனர்.

அதுமட்டுமன்றி உரிய சட்ட ஆலோசனைகளைப் பின்பற்றி வழக்கு தொடுக்கவேண்டும் என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

## கேப்பாபிலவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேப்பாப்பிலவு மக்களின் நில மீட்புப் போராட்டம் 533 நாட்களைக் கடந்துள்ள நிலையில், இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பாகபோராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,எமது போராட்டம்500ஆவதுநாளை அடைந்த போது நாம் எமது காணிகள் குறித்து தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கும் மேலும் எமது போராட்ட வடிவங்களை மாற்றுவதற்கும் நினைத்திருந்தோம்.

ஆனால் எமது போராட்டத்திற்கு தமிழ் அரசியல் தலைமைகளோ அல்லது அரசாங்கமோ இதுவரை எந்த ஆக்கபூர்வமான தீர்வுகளையும் தரவில்லை.

நாம் எமது சொந்த நிலங்களையே திருப்பித்தருமாறு கேட்கின்றோம். நாம் எமது விடயத்தில்தமிழ் அரசியல் தலைமைகள் மற்றும் சர்வதேசத்தைப் பெரிதும் நம்பியிருந்தோம்.

ஆனால் 533 நாள்களைக் கடந்தும் இதுவரையிலும் எந்த முன்னேற்றமும்எமதுவிடயத்தில் இடம்பெறவில்லை. சர்வதேசம் கூட எம்மைத் திரும்பிப் பார்க்கவில்லை.

இனிமேலும் யாரையும் நம்பாமல் நாம் எமது நிலங்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். அது எவ்வாறான நடவடிக்கைகள் என்பது இன்னும் முழுமையாகத் தீர்மானிக்கப்படவில்லை – என்றார். (ஐ)

## வன்முறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கில் தேவையற்ற பயபீதி நிலவுகின்றது ஆனால் வடபகுதி மக்கள் மீண்டும் வன்முறைகள் தலைதூக்குவதற்கு அனுமதிக்க மாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டிற்கு எவை சிறந்த விடயங்கள் என கதைப்பதற்கு ரணில்விக்கிரமசிங்கவிற்கும் பசிலுக்கும் அருகதையில்லை.

கடந்த 70 வருடங்களாக இரு பிரதான கட்சிகளும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் எவையும் தங்களிடம் இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தனக்கு 32 வருடங்கள் தேவை என ரணில்விக்கிரமசிங்க தெரிவிக்கின்றார்,அவருக்கு தற்போது 70 வயதாகிவிட்டதால் அவர் அது வரை உயிருடன் இருப்பாரா என்பதே சந்தேகம்.

பத்து வருடங்களாக ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக மீண்டுமொருமுறை அதிகாரத்தைக் கோருகின்றார் –என்றார். (ஐ)

## சபாநாயகரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு எதிரணியாகிய நாம் பலதடவைகள் பதில் வழங்கியுள்ளோம். ஒரே அணியில் உள்ளவர்கள் ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் இருக்கின்றமை இலங்கை அரசியல் வரலாற்றில் ஒன்றும் புதிய விடயமல்ல.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து கூட்டு அரசை அமைத்தமையால், எமது தரப்புக்கு எதிரணி அந்தஸ்த்தை வழங்க முடியாது என அரச தரப்பிலிருந்து கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு பொய்யாகும்.

ஏனெனில், கூட்டு அரசு தொடர்பிலான ஒப்பந்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும்தான் கைச்சாத்திட்டுக்கொண்டதே ஒளிய, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யல்ல.

நாடாளுமன்றச் சம்பிரதாயங்களின்படி கட்சியின் உறுப்பினர்களுக்கு அன்றி குழுவின் உறுப்பினர்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

நாடாளுமன்றின் எதிரணியில் உள்ள பெரிய கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் எமது தரப்பிலேயே அதிக உறுப்பினர்கள் உள்ளனர்.

இது தொடர்பில் நாம் சபாநாயகருக்கும் பதில் வழங்கியுள்ளோம். எனினும், இதில் முதுகெலும்பு இல்லாதவர் போலத் தான் தொடர்ந்தும் அவர் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். பிரதமரின் தலையசைவுக்கு இணங்கவே சபாநாயகர் செயற்பட்டு வருகிறார்.

சபாநாயகர் எமது குரலுக்கு செவிமடுக்காவிட்டால், நாமும் அவரின் குரலுக்குச் செவிமடுக்காமல் இருக்க நேரிடும். அவருக்கு உரிய மரியாதைகளை நாடாளுமன்றில் வழங்க முடியாத நிலைமைக்கு நாமும் தள்ளப்படுவோம் என்பதை அறிவித்துக்கொள்கிறோம் – என்றார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தின் போது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 05 ஆம் திகதி கொழும்பில் நடத்தவிருக்கும், அரசுக்கு எதிரான பேரணி தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட வுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி – தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரை மாற்றுவதற்கான அதிகாரம், அரசமைப்பிலோ, சம்பிரதாயத்தின்பிரகாரமோ இல்லை என சபாநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்றில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## செஞ்சோலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறுகிறது.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 காலை 6 மணிக்கு இலங்கை அரச வான்படையின் இரண்டு கிபிர் விமானங்கள் செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

இதில் 61 மாணவிகள் கொல்லப்பட்டனர். 100 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர். அன்று இந்த சம்பவம் தமிழர் தாயகம் – புலம்பெயர் தேசம் எங்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

12 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த அந்த கொடிய நிகழ்வை யாராலும் மிக எளிதாகக் கடந்து போக முடியாது.

போரால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்த பெண் பிள்ளைகளின் பாரமரிப்புக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பணிப்புரையின் பேரில் 1991 ஐப்பசி 23ஆம் திகதி செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அப்போது தலைவர் பிரபாகரனால் அனுப்பப்பட்ட வாழ்த்துச்செய்தியில் 'வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்தச் செஞ்சோலை வளாகத்தில் நாம் இன்று இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம்.

இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாய் மாறி ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல். இந்த புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள் என்று குறிப்பிட்டிருந்தார்.

செஞ்சோலை சிறுவர் இல்ல மாணவிகள், முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் தற்காப்பு பயிற்சியில் ஈடுபட்டிருந்ததைமையை அறிந்த இலங்கை அரசபடைகள், 2006ஆம் ஆண்டு காலை 6 மணி இலங்கை அரச வான்படையின் இரண்டு கிபிர் விமானங்களை அனுப்பி மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தின.

இதில் 61 மாணவிகள் கொல்லப்பட்டுடன் 100இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் பலர் தற்போது சிறப்புத் தேவையுடையவர்களாக உள்ளனர்.

இந்த தாக்குதல் விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டோர் மீதே நடத்தப்பட்டது என இலங்கை அரசு அப்போது உலக நாடுகளுக்குத் தெரிவித்திருந்தது.

எனினும் மாணவிகள் தற்காப்புப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே விமானத் தாக்குதல் நடப்பட்டது என சர்வதேச கண்காணிப்பாளர்களும் தொண்டு நிறுவனங்களின் அதிகாரிகளும் தெரிவித்திருந்தனர். (ஐ)

## அழிவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியில் காணப்படும் பிரதான பிரச்சினைகளை நாம் துரித கதியில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

அத்துடன் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வெற்றியைச் சரியான முறையில் பயன்படுத்தாததன் காரணமாகக் கூட்டு எதிரணி இன்று அழிவை நோக்கி பயணித்துக் கொண்டுள்ளது – என்றார். (ஐ)

## நுண்கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகள் குறித்து ஆராயப் பட்டது.

இதன்போதுஒருலட்சத்துக்குக் குறைவானோர் நுண்கடன் பெற்று அதனை மீளச் செலுத்த இயலாதவர்களின் கடனை அரசு மீளச்செலுத்துவதற்கு இணங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் பிரதேசசெயலகத்தில் பதிவுகளைச் செய்வதற்கான தகவலை வெளியிட்டிருந்தோம்.

ஆனால் 1லட்சத்திற்குள் கடன் பெற்றவர்கள் 4 பேரும், ஒரு லட்சத்திற்கும் மேல் கடன் பெற்றவர்கள் 16 பேரும் பதிவுகளை செய்திருக்கின்றார்கள்.

மக்கள்தாம்கடன்பெற்றமையை வெளியே கூறுவதற்கு அச்சப்படுகிறார்கள். அதிகாரிகளால் இதற்கு மேல் ஒன்றுமே செய்ய இயலாத நிலை காணப்படுகிறது. எனவே மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பாக மக்கள் மத்தியில் வெளிப்படுத்திமக்களைத்தெளிவுபடுத்தப்படவேண்டும் என அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

இதற்குப்பதிலளிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சு நடத்தியதன் அடிப்படையில் ஒரு லட்சம் ரூபா வரையிலான நுண்கடன் பெற்றவர்களின் கடன்களைத் திருப்பி செலுத்த முடியாமல் இருப்பார்களானால் அதனை அரசு செலுத்துவதற்கு இணங்கியிருக்கிறது – என்றார்.

இதன்போது யாழ்.மாநகர முதல்வர் கருத்து கூறுகையில்–

வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தங்கள் தேவைகளுக்காக வங்கியில் கடன்பெற்றிருப்பார்கள். அதனை நுண்கடன் நிறுவனங்களிடம் கடன் பெறும்போது குறிப்பிடுவதில்லை எனக் கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, கூடுதலான இடங்களில் கடன்களை பெற்றவர்கள் தொடர்பாக இந்த இடத்தில் நாங்கள் எதனையும் கூற இயலாது. அதனை அரசுடன் பேசிய பின்னரே கூற இயலும் – என்றார்.

தொடர்ந்து யாழ்.மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் கூறுகையில்,

யுத்தம் உள்ளிட்ட பல்வேறு சூழல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர் படுக்கையில் இருப்பார். அவருடைய குடும்பம் நிறைந்த வறுமையில் இருக்கும். அவ்வாறான குடும்பங்களைப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக கணிப்பதில்லை. கணிக்கவும் முடியாது. அதனால் அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படாமலேயே உள்ளன.

எனவே மக்களுடைய தேவைகளை அறிந்து உதவிகள் செய்யப்படவேண்டும். இல்லையேல் மக்கள் குடும்ப வறுமையைப் போக்குவதற்காக கடன் களைப் பெறவேண்டியுள்ளது எனக் கூறினார். (ஐ-7)

# வெற்றிக் களிப்பில் இலங்கை

அகில தனஞ்சய அளித்த அதிர்ச்சி வைத்தியம் காரணாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது போட்டியில் இலங்கை 178 ஓட்டங்களால் அபாரமாக வெற்றியீட்டியுள்ளது.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் கொழும்பு, ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பிற்பகல் 2:30 மணிக்கு ஆரம்பமானது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை முதலில் துடுப்பெடுததாட தீர்மானித்தது. இதன் பிரகாம் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அணித் தலைவர் அஞ்சலோ மெத்தியூஸ் 97 ஓட்டங்களையும் நிரோன் திக்வெல்ல 43 ஓட்டங்களையும் குசல் மெண்டீஸ் 38 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 30 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றுக் கொண்டனர்.

300 என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு முதல் ஓவரிலேயே சுரங்க லக்மால் அதிர்ச்சி அளித்தார். அதன்படி தென்னாபிரிக்க அணி எதுவித ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ளாது முதல் ஓவரின் நான்காவது பந்திலேய அம்லா போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.



இதையடுத்து அணித் தலைவர் டீகொக்குடன் இணைந்து மார்க்ரம் இலங்கை அணிக்கு ஆட்டம் காட்ட ஆரம்பித்தபோது 5.4 ஆவது பந்தில் அகில தனஞ்சயவிடம் சிக்கினார். இதன்படி அவர் 13 பந்துகளை எதிர்கொண்டு 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்த ஹேண்ட்ரிக்ஸும் அகில தனஞ்சயவின் அடுத்த பந்தில் எதுவித ஓட்டங்களும் பெறாது போல்ட் முறையில் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணிக்கு அகில தனஞ்சய அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்.

இவரையடுத்து வந்த கிளேசனும் தனஞ்சயவின் சுழலில் சிக்கி அதிக நேரம் தாக்குபிடிக்காது மூன்று ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 39 ஓட்டங்களுக்குள் நான்கு விக்கெட்டுக்களை இழந்து நிலைகுலைந்து தடுமாறியது.

அதன்பின் களம் புகுந்த டூமினியுடன் ஜோடி சேர்ந்து டீகொக்கும் சேர்ந்தாட தென்னாபிரிக்க அணி 85 ஓட்டங்களை கடந்தது. இதன் பின் தனஞ்சய டிசில்வாவின் பந்து வீச்சினை எதிர்கொண்ட டூமினி 12 ஓட்டங்களுடன் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தென்னாபிரிக்காவுக்கா மிகவும் போராடி வந்த அணியின் தலைவர் டீகொக் அரைசதத்தினை பூர்த்தி செய்த நிலையில் அகில தனஞ்சய பந்தை மீண்டும் கையில் எடுக்க 57 பந்துகளுக்கு 54 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியாக தென்னாபிரிக்க அணி இலங்கையின் பந்து வீச்சுக்களை எதிர்கொள்ள முடியாது 24.4 ஓவர்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 121 ஓட்டங்களை பெற்று 178 ஓட்டங்களினால் படுதோல்வி கண்டது.

இலங்கை அணி சார்பாக தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்த அகிலதனஞ்சய 29 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களையும், லஹுரு குமார இரண்டு விக்கெட்டுக்களையும், சுரங்க லக்மால், தனஞ்சய டிசில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இவ்விரு அணிகளுக்கிடையிலான ஒரு இருபதுக்கு 20 போட்டி இன்று ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இரண்டாவது டெஸ்டிலும் இங்கிலாந்து வெற்றி

இங்கிலாந்து மற்றும் இந்தியா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 159 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2:0 என முன்னிலை பெற்றுள்ளது.

கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

முதல் நாள் ஆட்டம் முழுமையாக மழையால் பாதிக்கப்பட்டதால், இப்போட்டி பெரும்பாலும் சமநிலையில் முடியும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்த எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கிய இங்கிலாந்து அணியினர், நான்கு நாள்களிலேயே போட்டியை நிறைவுக்கு கொண்டு வந்து அபார வெற்றியை பதிவுசெய்தனர்.

மறுபுறம் படுதோல்வியை சந்தித்துள்ள உலகின் முதல்நிலை டெஸ்ட் அணியான இந்தியா அணி, காரசாரமான விவாவதத்துக்கு உள்ளாகியுள்ளது.

இப்போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழையால் தடைப்பட்டதையடுத்து, இரண்டாம் நாள் ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி, முதல் இன்னிங்ஸில் 107 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது இந்தியா அணி சார்பில் அஸ்வின் 29 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டமாக பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ஜேம்ஸ் அண்டர்சன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைதொடர்ந்து, பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, சிறப்பாக துடுப்பெடுத்தாடியது.

இங்கிலாந்து அணி 396 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகள் பெற்றிருந்த வேளை தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதன்பிறகு 289 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியா அணி, 130 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா அணி, இன்னிங்ஸ் மற்றும் 159 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

இதில் இந்தியா அணி சார்பில் அஸ்வின் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஜேம்ஸ் அண்டசன் மற்றும் ஸ்டுவர்ட் பிரோட் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இந்தியா அணி சார்பில் இரண்டு இன்னிங்ஸ்சுகளிலுமே அஸ்வின் தான் அதிகபட்ச ஓட்டங்களை பெற்றார். இதன் மூலம் எட்டாவது வீரராக அல்லது அதன்பிறகு களமிறங்கி இரண்டு இன்னிங்ஸ்சுகளிலும் அதிசபட்ச ஓட்டங்களை பெற்ற முதல் இந்தியா வீரர் என்ற பெருமையை அஸ்வின் பெற்றார். அத்தோடு உலகளவில் ஆறாவது வீரர் என்ற பெருமையையும் தன்வசப்படுத்தினார்.

மேலும், இந்தியா அணி குறைந்த இன்னிங்ஸ்சுகளில் ஓட்டங்கள் பெற்ற போது அணியில், அதிகபட்ச ஓட்டங்களை பெற்ற வீரர்கள் வரிசையில், அஸ்வின் ஐந்தாவது இடத்தை பிடித்தார். இந்தப் பட்டியலில் சர்வேட் 26 ஓட்டங்களுடன் முதல் இடத்தில் உள்ளார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தனது முதல் சதத்தை பூர்த்தி செய்த கிறிஸ் வோக்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 18ஆம் திகதி நொட்டிங்ஹாம் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## அரையிறுதிக்கு யாழ். மத்தி

இலங்கை பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகளின் அரையிறுதிப் போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி தகுதிபெற்றுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரியை வென்றே அரையிறுதிப் போட்டிக்கு மத்திய கல்லூரி தகுதி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தமது முதலாவது மத்திய கல்லூரி, 9 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்ற போது, தமது ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், எம். சஞ்சயன் 63, எஸ். நிபேஸ் 61, வி. ஹவிதர்சன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில், ஹஜநாத் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத்தில், கஜன் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், கௌதம், சஞ்சயன் ஆகியோர் தலா 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மத்திய கல்லூரி, போட்டி முடிவுக்கு வருகையில், 4 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில், சஞ்சயன் 70 ஓட்டங்களைப் பெற்றார்.

போட்டி விதிமுறையின் படி, முதல் இனிங்ஸில் முன்னிலை பெறும் அணி வெற்றிபெற்ற அணியாக கொள்ளப்படும் எனும் அடிப்படையில் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.

## உலக குத்துச் சண்டையில் கண்டி மாணவர்கள்



உலக வெற்றிக் கிண்ண குத்துச் சண்டைப் போட்டியில், கண்டி, பிலிமத்தலாவை தீராநந்த மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் பங்குபற்றவுள்ளனர்.

இக்குத்துச் சண்டைப் போட்டிக்கு, இலங்கை சார்பாக தீராநந்த மகா வித்தியாலய மாணவர்கள காவிந்த சேத்தயி ஏக்கநாயக்கா தெரிவாகியுள்ளார். இவர் பங்கு கொள்ளும் போட்டி சீனா தாய்பேயில் இடம் பெறும்.

அதே பாடசாலையைச் சேர்ந்த காவிந்த சஞ்நே பண்டார ஹங்கேரியில், இம்மாதம் 20ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இடம்பெறும் போட்டியில் பங்கு பற்றவுள்ளார்.

தாய்லாந்தில் இடம் பெற்ற ஆசிய இளைஞர் குத்துச் சண்டைப் போட்டியில் காட்டிய திறமையின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரையும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா அழைத்து வாழ்த்து தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir



# சர்வதேச நீதிமன்ற ஆயத்தின் முன்னால் இலங்கை விவகாரத்தை விசாரியுங்கள்!

## நாடு கடந்த தமிழீழ அரசு பிரிட்டனில் கையெழுத்து வேட்டை




ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் செயலாளர் நாயகத்தின் கருத்தின் அடிப்படையில் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு, ஆற்றுப்படுத்த பிரித்தானியா முயற்சிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அதற்கான முயற்சிகளில் பன்னாட்டு தளத்தில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் லண்டன் ஈஸ்ட் ஹம் முருகன் கோயில், ஈலிங் அம்மன் கோயில் ஆலய தேர்த்திருவிழாவின் போது நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாட்டாளர்கள் மக்களிடம் கையெழுத்து சேர்க்கும் பிரசாரப் பணியில் ஈடுபட்டனர்.

2015 ஆம் ஆண்டு மார்ச்சில் இலங்கை தொடர்பாக 30/01 என்ற பிரேரணை ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலினால் நிறைவேற்றப்பட்டது. அதன் கீழ் இலங்கை அரசாங்கத்துக்குப் பல கடப்பாடுகள் இருந்தன. அவற்றை நிறைவேற்ற இரண்டு ஆண்டு காலம் கொடுக்கப்பட்டது. ஆனால், அவற்றை நிறைவேற்றா மலேயே இலங்கை அரசாங்கம் காலத்தை இழுத்தடித்து வந்தது.

2017 மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பிலான மற்றொரு தீர்மானம் (34/1) நிறைவேற்றப்பட்டது. இதற்கும் இலங்கை அரசாங்கமும் அனுசரணை வழங்கியது. பொறுப்புக்கூறலை உள்ளடக்கிய நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை உருவாக்குவதற்கு மேலும் இரண்டு வருடகால அவகாசம் அதன் போது வழங்கப்பட்டது. இலங்கையின் அனுசரணையைப் பெறுவதற்காக மேற்குநாடுகள் அந்தப் பிரேரணையின் காரத்தை பெருமளவுக்குக் குறைத்தன என்பது யாவருக்கும் தெரியும் . சர்வதேச சமூகம் தற்போதைய இலங்கை ஆட்சியாளருக்குச் சாதகமான முறையிலேயே அப்போது இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது. அப்படியும் இலங்கை அரசாங்கம் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டவில்லை.

இன்று வரைக்கும் தான் வாக்குறுதி அளித்தவற்றில் எவற்றை இலங்கை நிறைவேற்றியதா என்ற கேள்வி எல்லோரிடமும் உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமானஅலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு கையாலாகாத்தனமான ஓர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது .பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் கைவாங்கப்படவில்லை. அந்தக்கொடூரமான சட்டத்தின் கீழ் கைதான பலர் இன்னமும் தடுப்பில் உள்ளனர். பலர் சம்பந்தமாக வழக்குகள் பதியப்படவில்லை.

சிறுபான்மையினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன.

இனநெருக்கடிக்கான அரசமைப்பு மூலமான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையும் தற்போது இல்லை என்றே கூறலாம். நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளையடுத்து கூட்டரசாங்கம் அதனை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதே யதார்த்தம்.

பெரும்பான்மையின அரசாங்கம் நெருக்குதல் இல்லாவிட்டால் ஒருபோதும் எமது உரிமைகளைத் தர முன்வராது என்பதே உண்மையும்கூட . நியாயமான முறையில் போர்க் குற்றங்களை விசாரிக்க அரசாங்கம் முன்வராது. எந்தளவுக்கு நெருக்குதல்களைப் பிற அரசாங்கங்கள் உண்டு பண்ணும் என்பது, நாம் அவர்களுடன் சேர்ந்து பேசி ஏற்படுத்த வேண்டியதொன்று. காலங் கடந்தால் 'ஆறினகஞ்சி பழங்கஞ்சி ஆகிவிடும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை ஐ.நா பாதுகாப்புச்சபை ஆற்றுப்படுத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை எம்மிடையே எழுந்துள்ளது.

இந்த அடிப்படையில்தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இவ்வாறானதொரு செயற்பாட்டில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## ஞானசாரருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்வதில் பெரும் சிக்கல்

கொழும்பு, ஓக.14

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தற்பொழுது ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு நேற்று சத்திரசிகிச்சை முன்னெடுக்கப்படவில்லை எனவும் அவரது இருதயத் துடிப்பில் காணப்படும் வித்தியாசமான செயற்பாடு அதற்குக் காரணம் எனவும் அவ்வைத்தியசாலையின் மேலதிக பணிப்பாளர் டாக்டர் பிரபாத் வீரவத்த தெரிவித்துள்ளார்.

தேரருடைய இருதயச் செயற்பாட்டில் சிறு மாற்றம் காணப்படுவதாகவும் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையையடுத்து வைத்தியர்கள் கண்டுபிடித்துள்ளதாகவும் டாக்டர் மேலும் கூறியுள்ளார்.

இதனால், இவரை நினைவு மறக்கடிக்கச் செய்ய இவருடைய இருதயத் துடிப்பு மாற்றம் தடையாகவுள்ளதாகவும் டாக்டர் பிரபாத் கூறியுள்ளார்.



ஞானசார தேரரின் சிறுநீரகத்தில் 2 சென்ரி மீட்டர் அளவான கல் ஒன்று உள்ளதாகவும் இதனை அகற்றுவதற்கு இன்று சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவிருந்ததாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரயில் வேலைநிறுத்தம் காரணமாக போக்குவரத்துச் சபைக்கும் நஷ்டம்

புகையிரத தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக, புகையிரத திணைக்களத்துக்கு மட்டுமன்றி, இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் 10 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து நாட்கள், ரயில் பருவச்சீட்டுகளை வைத்திருந்த ரயில் பயணிகள், இ.போ.ச.வுக்கு சொந்தமான பஸ்களில், இலவசமாக ஏற்றிச்செல்லப்பட்டனர்.

அதுமட்டுமன்றி, நாளொன்றுக்கு 80 ஆயிரம் கிலோமீற்றர் தூரம், மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால், இ.போ.சவுக்கும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## அந்நிய செலாவணியை பலப்படுத்த வேண்டும்

### பிரதமர் ரணில் கோரிக்கை



கொழும்பு, ஓக.14

கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை பொறுப்பேற்றதன் காரணமாக மக்கள் மீது அதிகளவான பாரத்தை சுமத்தி வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றாண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்பிரகாரம் குருநாகல் மாவட்டத்திற்கான நீர் வழங்கும் திட்டம் பிரதமரினால் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், அகில விராஜ் காரியவசம், காமினி ஜயவிக்கிரம பெரேரா உட்பட அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்,

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை பொறுப்பேற்றதன் காரணமாக மக்கள் மீது அதிகளவான பாரத்தை சுமத்தி வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக நாங்கள் மக்களின் விமர்சனங்களுக்கும் உள்ளானோம்.

எனினும் தற்போது பொருளாதாரத்தை சுமுகமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். ஆகையினால் இனிமேல் மக்களிடம் தூற்றுதலுக்குள்ளாக வேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன் நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியை நாம் பலப்படுத்த வேண்டும். நாட்டின் கடன் சுமை காரணமாக நாட்டின் பொருளாதாரம் சவால்மிக்கதாக காணப்பட்டது. அதனை கட்டியெழுப்புவதற்கே கடுமையான முயற்சிகளை முன்னெடுத்தோம். எனினும் தற்போது சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்நிய செலாவணியின் ஊடாக கிடைக்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். முன்பை விடவும் அந்நிய செலாவணியை எம்மால் அதிகரிக்க முடிந்தது. இதற்கமைவாக ஏற்றுமதி வருமானத்தையும் நாம் அதிகரிக்க வேண்டியுள்ளது. ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும் போதுதான் நாட்டை சீரான நிலமைக்கு கொண்டு வர முடியும் என்றும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.